வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 19.09.2022 திங்கட்கிழமை | இதழ் : 284 | பக்கங்கள் : 16

## சமஷ்டி அதிகார பகிர்வே வேண்டும் இந்தியாவின் நிலைப்பாடும் இதுவே!

### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு



வவுனியா, செப். 19

அரசியல் தீர்வு சமஷ்டி கட்டமைப்பிலான அர்த்தமுள்ள ஓர் அதிகாரப் பகிர்வாக இருக்க வேண்டும். இத்தகைய அதிகார பகிர்வையே நாம் ஏற்றுக்கொள்வோம். இந்தியாவும் இந்த நிலைப்பாட்டிலேயே உள்ளது என்று தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரான எம். ஏ. சுமந்திரன் எம். பி. தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று தமிழ் அரசுக் கட்சியின் 15

## ஆசிரியர்களின் சம்பளம் போதாது; போராட்டத்தில் குதிக்க நேரிடும்!

### இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, செப். 19

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் ஆசிரியர்களுக்கான சம்பளம் போதுமானதாக இல்லை. எனவே, எதிர்காலத்தில் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிட்ட அரசியல்வாதிகள் தற்போது மக்களின் வரிப்பணத்தில் சுகபோகம் அனுபவித்தவாறு மக் 15

# கூட்டமைப்பைப் பிளவின்றி தொடர பங்காளிகளுடன் பேசுவதற்கு முடிவு!

### தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு எடுத்தது

- தேசிய மாநாடு டிசெம்பர் 17 அல்லது 18இல்
- திருமலையில் கூடுவதற்கும் ஆலோசனை!

வவுனியா, செப்ரெம்பர் 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவின்றி தொடர்ந்தும் முன்னோக்கி கொண்டு செல்லவும் இது தொடர்பில் சக கட்சிகளான ரெலோ, புளொட் கட்சிகளுடன் பேசவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி முடிவு செய்துள்ளது. 15

## ஐ. எம். எவ். ஒப்பந்தம் குறித்து கடன் வழங்குநர்க்கு விளக்கம்!

கொழும்பு, செப். 19

அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்கள் தொடர்பில் அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இலங்கையின் வெளி கடன் கொடுநர்களுக்கு அறிவிக்கப்படும் என உலகளாவிய சட்ட நிறுவனமான கிளிவ் போர்ட் சான்ஸ் (Clifford Chance) தெரிவித்துள்ளது. 15

## அரசமைப்பு மாற்றம் குறித்து எந்த நடவடிக்கையும் இல்லை!

### ரிஷாத் பதியுதீன் எம். பி. கவலை

வவுனியா, செப். 19

நாடு சீரழிவுக்கு உள்ளாகக் காரணகர்த்தாவாக இருந்த முன்னாள் அமைச்சர்களை மீண்டும் அமைச்சர்களாக நியமிப்பதற்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றதே ஒழிய அரசமைப்பு மாற்றம் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நேற்று வவு 15

## புதிய சிக்கலில் சிக்குகிறது பொலிஸ் திணைக்களம்?

கொழும்பு, செப். 19

பொலிஸ் திணைக்களம் வருங்காலத்தில் ஆள் பற்றாக்குறை எனும் பெரும் சிக்கலுக்குள் சிக்கவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பொலிஸ் சேவையில் இருப்பவர்களுக்கும் வெளிநாடு செல்ல 5 வருடங்கள் விடுமுறை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இது தவிர, அடுத்த வருடம் அதிகளவான பொலிஸார் ஓய்வு பெறவும் உள்ளனர். இதனால், பெரும் ஆள்பற்றாக் குறை ஏற்படவுள்ளது. 15



## விஷமிகளின் செயலால் 20 பனைகள் தீயால் நாசம்!

யாழ்ப்பாணம், செப். 19

உடுவிலில் விஷமிகள் சிலர் பனங்கூடலுக்கு வைத்த தீயால் 20 பனைமரங்கள் முற்றாக எரிந்து நாசமாகின.

இந்தச் சம்பவம் உடுவில் தொம்பை வீதியில் 15

## 'ஜெனிவா' மூலமாக இலங்கைக்கு பதிலடி கொடுக்கிறதாம் இந்தியா!

கொழும்பு, செப். 19

இலங்கை தனது கடல் பரப்புக்குள் சீனாவின் கப்பலை அனுமதித்ததால் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தியா தீவிரம் காட்டுகிறது என்று கூறப்படுகின்றது.

ஜெனிவா வரலாற்றில் இலங்கைக்கு சாதகமான நிலையை கடந்த காலங்களில் பேணி வந்த இந்தியா, இம்முறை தலைகீழாகத் தனது நிலைப்பாட்டை மாற்ற நடவடிக்கை எடுத்தது ஆச்சரியமான விடயம்.

தொடக்கத்தில் இருந்தே ஜெனிவாவில் நாங்கள் பாதுகாத்த கொள்கையில் இந்தியா 15

## தாமதத்தால் வீணாகும் டொலர்கள்!

கொழும்பு, செப். 19

பணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக மசகு எண்ணெய் தாங்கிய கப்பல் நாட்டின் கடற்பகுதியில் தொடர்ந்தும் நங்கூரமிட் 15

## பொருளாதார வளர்ச்சிக்கு அதிகார பகிர்வு அவசியம்!

### கனடா எம். பி. ஹரி ஆனந்தசங்கரி

ஒட்டாவா, செப். 19

அதிகாரப் பகிர்வும் இராணுவ மயப்படுத்தலை முடிவுக்குக் கொண்டுவருவதும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அவ 15

## இப்படியும் நடக்கிறது...!

தற்போது பிரதமராகவுள்ள தினேஷ் குணவர்த்தனவை பதவியில் இருந்து நீக்க பொதுஜன பெரமுனவின் 'தலை'யாக செயல்பட்டுவரும் பஸில் ராஜபக்ஷ திட்டமிட்டு வருகிறார் என்று சிங்கள வார ஏடொன்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தத் தகவலின் பின்னணியிலேயே எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் பொதுஜன பெரமுன எம். பியான சன்ன ஜயசுமண அண்மையில் ஒரு தகவலை வெளியிட்டிருந்தார்.

தற்போது டலஸ் அழகப்பெருமவுடன் இணைந்திருக்கும் சன்ன ஜயசுமண, தெரிவித்திருந்த தகவல் ஒன்று எதிர்காலத்தில் ஏற்படப்போகும் அரசியல் குழப்பத்தை ஏற்கனவே கோடிட்டுக் காட்டியிருந்தது.

அண்மைய நாட்களில் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மை அணுகி, புதிய பிரதமரின் கீழ் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவைக் கோரி வருகின்றனர் என்று அவர் தெரிவித்திருந்தார். அப்போது, சன்னவின் கூற்றில் பலர் அதிக ஆர்வம் காட்டாத நிலையில், சன்னவின் அந்த கூற்றில் வரவிருக்கும் அரசியல் குழப்பங்கள் பற்றிய குறிப்புகள் அடங்கியிருந்தன என்று அந்தப் பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

சன்ன ஜயசுமண, பொதுஜன பெரமுனவில் இருக்கும் ஒரு சில கோட்டாபய ராஜபக்ஷவின் சகாக்களில் ஒருவர் என்பது இரகசியமானதல்ல.

அவரின் கூற்றின்படி மற்றுமொரு விடயமும் தெரியவந்திருக்கின்றது. கடந்த காலங்களில் ஒழுங்கற்ற நிலையில் இருந்த பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, இப்போது மக்கள் போராட்டத்தின் அடிப்படையில் மறுசீரமைக்கப்பட்டு ஆட்சியைப் பிடிக்க அணிவகுத்து நிற்கின்றது என்ற விடயமே இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றதாம்.

தினேஷ் குணவர்த்தனவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு வேறொரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை பிரதமராக நியமிப்பது பஸில் ராஜபக்ஷவின் திட்டம் என்று தெரிவித்துள்ள அந்த சிங்கள பத்திரிகை,

எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னதாக இந்த மாற்றத்தை மேற்கொள்ள பஸில் உள்ளிட்ட பொதுஜன பெரமுன தலைவர்கள் திட்டமிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது என்றும் அதற்காக பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்து சென்ற அனைவரையும் ஒன்று திரட்டுவதே பஸிலின் திட்டம் எனவும் அந்தத் திட்டத்தின்படி தற்போது எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் சன்னவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருக்கின்றது.

அப்படியானால், புதிய பிரதமராக தினேஷை நீக்கி யாரை நியமிக்கத் திட்டமிட்டது?

இது தொடர்பாக அந்த பத்திரிகை, இரு வேறு கருத்துக்கள் கட்சிக்குள் உள்ளன என்று அறிவதாக தெரிவிக்கின்றது. அறுபத்து ஒன்பது இலட்சம் மக்களின் ஆணை இன்னும் இருப்பதால் கோட்டாபயவை பிரதமராக்க வேண்டும் என்று ஒரு பிரிவினர் தெரிவித்து வருகின்றனராம். கோட்டாவை ஆட்சிக்கு கொண்டு வருவதில் பெரும் பங்காற்றிய குழுவை இந்தப் பிரிவு பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

ஆனால், தற்போது பல கட்சிகளாக பிரிந்து கிடக்கும் பொதுஜன பெரமுனவை ஒன்றிணைக்கக்கூடியவர் மகிந்த ராஜபக்ஷ மட்டுமே எனவும், எனவே மகிந்தவை மீண்டும் பிரதமராக்க வேண்டும் என்றும் பொதுஜன பெரமுனவின் கடும்போக்கு குழு கோரிக்கை விடுத்து வருகின்றதாம்.

இதன்படி பிரதமர் பதவிக்கு கோட்டாபய மற்றும் மகிந்தவின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. பொதுஜன பெரமுனவில் நூற்று பத்தொன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டாலும், இந்த முயற்சியின் முன்னேற்றம் பொதுஜன பெரமுனவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்தே தீர்மானிக்கப்படும் என்பதால் பிரிந்துசென்றவர்களையும் வளைத்துப்போட பெரும் முயற்சி நடக்கிறது என்கிறது அந்தப் பத்திரிகை.

பஸில் என்னதான் முயற்சி செய்தாலும், அடுத்த வரவு - செலவுத் திட்டம் என்பது பல்வேறு வகையில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

ஏனெனில், இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்கத்துக்கு முன்வைக்கப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பெருமளவிலான நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன்மொழிவுகளை அரசாங்கம் தயார் செய்ய வேண்டியுள்ளது. அரசாங்கத்தின் செலவீனங்களை வெகுவாகக் குறைத்து, வருவாயை அதிகரிக்க வேண்டும் என்று சர்வதேச சாணய நிதியம் ஏற்கனவே அரசுக்குத் தெரிவித்துள்ளது.

இவற்றை சரியாக செய்யாத பின்னணியில் பிரதமரை மாற்றுவதோ அல்லது அரசாங்கத்தை மாற்றுவதோ சாத்தியமாகக்கூடியதல்ல என்பது மகிந்த போன்ற அரசியல்வாதிக்கு தெரியாததல்ல. ஆனாலும் அடுத்த வரவு - செலவுத் திட்டத்தை பாராளுமன்றில் நிறைவேற்றுவது என்பது ரணிலுக்கு சவாலாகத்தான் இருக்கப்போகின்றது.!

**- ஊர்க்குருவி**

# அரசாங்கத்தின் அடக்குமுறைகள் இரு வருடங்களில் முடிவுக்கு வரும்!

## சரத் பொன்சேகா சொல்கிறார்

கொழும்பு, செப். 19

பொலிஸ், இராணுவம் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினரில் பெரும்பான்மையானோர் போராட்டக்காரர்களுக்கு சார்பாகவே உள்ளார்கள். தற்போதைய அரசியல் அடக்குமுறைகள் அனைத்தும் இன்னும் இரு வருடங்களில் நிறைவுபெறும். எதற்கும் அஞ்ச வேண்டாம். ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபடுங்கள். நாங்கள் உங்களுடன் உள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அனைத்து பல்கலைக்கழக மாணவர்களிடம் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



மேலும், நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை தற்போதைய பாராளுமன்றத்தின் ஊடாக செயல்படுத்த முடியாது. நாட்டுக்கான சிறந்த கொள்கை மற்றும் இலக்கினை உடையவர்கள் தற்போதைய பாராளுமன்றத்தில் இல்லை.

நாட்டு பிரஜை என்ற ரீதியில் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டேன். காலி முகத்திடல் போராட்டத்திற்கு கடந்த மார்ச் மாதம் ஆதரவு வழங்கினேன். போராட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவேன்.

போராட்டம் முடிவடையவில்லை. பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள மக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவார்கள். மக்கள் போராட்டத்துக்கு சகல தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும். போராட்டத்தின் ஊடாகவே சிறந்த தீர்வை பெற முடியும்.

பொலிஸாரில் நூற்றுக்கு 98 சதவீதமானோர் போராட்டம் பக்கம் உள்ளார்கள். இலாப நோக்கத்துடன் செயற்படும் ஒருசிலரின் அதிகாரம் இன்னும் இரண்டு வருட காலம்தான் செல்வாக்கு செலுத்தும். வாஸ் குணவர்த்தன, அநுர சேனாநாயக்க ஆகியோர் வீழ்ந்ததை நன்கு அறிவோம். நிலையான சிறந்த வெற்றிக்கு அரசியல் கட்சி பேதங்களை துறந்து அனைத்து தரப்பினரும் ஒரு கொள்கையின் அடிப்படையில் செயல்பட வேண்டும்.

இராணுவத்தினரும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவார்கள். இன்னும் இரண்டு வருடத்திற்குள் அனைத்து விளையாட்டையும் அரசாங்கம் விளையாடிக் கொள்ளட்டும் எதற்கும் அஞ்ச வேண்டாம்,போராட்டத்தில் ஈடுப்படுங்கள் உங்களுடன் நாம் உள்ளோம் - என்றார். (ஐ)

# நஞ்சு கலந்த அரிசி இறக்குமதியானதா?

## செய்திகள் பொய் என்கிறது அரசு

கொழும்பு, செப். 19

நஞ்சு கலந்த அரிசி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக நேற்று ஞாயிற்றுக் கிழமை வெளியான இரு வார இதழ்களில் பிரசுரமான செய்தி முற்றிலும் பொய்யானது எனவும் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை பூச்சிக்கொல்லி பதிவேட்டு அலுவலகத்தால் அவ்வாறான ஆய்வு முடிவுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை எனவும் பூச்சிக் கொல்லி பதிவு அலுவலகத்தின் பதில் பதிவாளர் லசந்த ரத்னவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆய்வொன்றை மையப்படுத்தி, குறித்த செய்தித்தாள்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. எனினும், இந்தச் செய்திகளின் உள்ளடக்கங்களில் குறைபாடுகள் உள்ளன என்று ரத்னவீர கூறுகிறார்.

இவ்வாறான பொய்யான செய்திகள் மூலம் பொதுமக்கள் மத்தியில் பீதி ஏற்படக் என்பதால், இவ்வாறான விடயங்களை எழுதும்போது உரிய தரப்பினரிடம், சரியான தகவல்களைப் பெற்று, உறுதி செய்துகொள்வது மிகவும் பொருத்தமானது எனவும் பூச்சிக்கொல்லி பதிவு அலுவலகத்தின் பதில் பதிவாளர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த ரத்னவீர,

இது 2017ஆம் ஆண்டு கண்டி பிரதேசத்தில் 68 மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகளை அடிப்படையாக வைத்து இந்தச் செய்தி எழுதப்பட்டுள்ளது.

ஆனால், இந்த ஆய்வுத் தகவல்களும் தவறாகப் பதிவாகியிருக்கிறது.

வெற்று உலோகத் துகள்கள் பொதுவாக சிறிய அளவில் இருப்பதால், அவை பத்துலட்சத்தில் ஒரு பங்காகவே அளவிடப்படுகின்றன. ஆனால், அந்த வெற்று உலோகங்கள் நூற்றுக்கு ஒரு பங்கு வீதத்தில் இருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து பூச்சிக்கொல்லி பதிவாளர் நாயகம் கூறுகையில்,

உலகில் எங்கும் சதவீதத்தில் வெற்று உலோகத்துகள் இருப்பதாக கண்டறியப்படவில்லை. அது நடைமுறையில் இல்லை. முறையான ஆய்வுகள் இன்றி இந்த ஆய்வு அறிக்கை பதிவாகியுள்ளது. தவறான கருத்துகளை பிரதிபலிக்கும் வகையில் தகவல்களை வெளியிடுவது பொதுமக்களுக்கு இடையூறாக மாறிவிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் நடத்தப்பட்ட சோதனைகளின் மூலம் இவ்வாறான எந்தவொரு முடிவுகளும் பதியப்படவில்லை என்றும் அவ்வாறு இருக்கும் பட்சத்தில் இப்படியான செய்திகளை வெளியிடுவது அடிப்படையற்றது என்றும் தெரிவித்தார்.

தவறான ஆதாரங்களுடன், வெளியிடப்பட்டுள்ள இந்தச் செய்திகள் மூலம் பொதுமக்களை தவறாக வழிநடத்தும் இந்த செயற்பாடு தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறையிட நடவடிக்கை எடுத்து வருவதாகவும் வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிசிர கொடிகார தெரிவித்துள்ளார். (ஐ)

# கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்!

வடமராட்சி, செப். 19

அயர்லாந்து ( கொல்வே) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற (AHAVOLI) யாழ். அகவொளி உளஆற்றுப்படுத்தல் நிறுவனம் உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா கற்கைநெறிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், குருக்கள், துறவியர்கள், தாதியர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர் மற்றும் உள ஆற்றுப்படுத்தல் சேவையில் ஆர்வமுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தமிழ் மொழியில் நடைபெறும் இந்தக் கற்கைநெறி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் நடைபெறும். எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

மேலதிக விவரங்களுக்கு யாழ். சென். பற்றிக்ஸ் வீதி, அகவொளி ஆற்றுப்படுத்தல் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ள முடியும். தொலைபேசி இல 021 -222-2856, கற்கைநெறி, ஒருங்கிணைப்பாளர்-76 937 8476, இயக்குநர்-77 476 6891 . (ஐ-2)

Eelanadu
19.09.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## ஜெனிவாவில் புதிய சிக்கல்?

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தன்மை மற்றும் அதன் இயலுமை என்பது அங்கத்துவ நாடுகளின் ஆதரவில்தான் இருக்கின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் ‘ஈழநாடு’ பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் நிலைப்பாடுகள் என்பவை வெறும் பரிந்துரைகள் மட்டும்தான் – ஆனால், அதனை ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக் கொள்ளாமல் விடுவதும் உறுப்பு நாடுகளின் நலன்கள் தொடர்பானது.

47 உறுப்பு நாடுகளில் பெரும்பான்மையான நாடுகள் சாதகமாக வாக்களித்தால் பிரேரணையை நிறைவேற்ற முடியும். இந்த அடிப்படையில்தான் இலங்கைமீது கொண்டுவரப்பட்ட அனைத்துப் பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாகத்தான் பிரேரணைகளில் பல்வேறு விட்டுக் கொடுப்புக்கள் செய்யப்படுகின்றன. பெரும்பாலான நாடுகளை திருப்திப்படுத்தாவிட்டால், பிரேரணையை நிறைவேற்ற முடியாமல் போய்விடும். இதுதான் ஜெனிவா தொடர்பான அரிவரி பாடமாகும்.

இம்முறை ஒரு புதிய சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது. அதாவது, சமர்பிக்கப்பட்டுள்ள புதிய வரைவில், “பொருளாதார குற்றம்“ என்னும் அடிப்படையில், இலங்கையில் பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படாத வகையில், ஊழல் மற்றும் அரசியல் முகாமைத்துவ சீர்கேடுகளும், அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்னும் விடயம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டே மேற்படி விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஊழல்களும் தவறான பொருளாதார திட்டமிடல்களுமே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என்பதே மேற்படி வாதத்தின் உள்ளடக்கமாகும். இந்த இடம்தான் தற்போது சிக்கலுக்குரியதாக மாறியிருக்கின்றது. இந்த விடயத்துக்கு பல உறுப்பு நாடுகள் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன.

மூன்றாம் உலக நாடுகள் பலவும் ஊழல் மற்றும் மோசடியான பொருளாதார முகாமைத்துவதை கொண்டிருக்கும் நாடுகளாகும். அந்த நாடுகளின் அரச தலைவர்கள்மீதும் இவ்வாறான விமர்சனங்கள் உண்டு. பொருளாதார குற்றம் என்னும் விடயத்தை ஏற்றுக்கொண்டால் அதன் மூலம் தாங்களும் எதிர்காலத்தில் விமர்சனங்களுக்கு உள்ளாகலாம் என்றே மேற்படி நாடுகள் கருதுகின்றன. இதன் காரணமாக, குறித்த விடயத்தை உள்ளடக்கிய பிரேரணைக்குப் பல நாடுகள் எதிர்ப்பு தெரிவித்திருக்கின்றன. இதனை சமாளிக்க முடியாவிட்டால் பிரேரணை தோல்வியடைக்கூடும். ஒருவேளை அவ்வாறு நடந்தால் இலங்கைமீதான மனித உரிமைகள் சார்ந்த அழுத்தங்கள் தோல்விடையலாம். இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட அழுத்தங்கள் கேள்விக்குள்ளாகும். மனித உரிமைகள் பேரவையில் விடயங்கள் தோல்வியுற்றால் அதன் பின்னர் பொதுச் சபை மற்றும் பாதுகாப்புப் பேரவை தொடர்பில் சிந்திக்கவே முடியாது.

இந்த சவாலை சமாளிக்க வேண்டுமாயின் உறுப்பு நாடுகளின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு பிரேரணையை மாற்றியமைக்க வேண்டும். இல்லாவிட்டால், பிரேரணை நிறைவேற்றுவதை பிற்போட வேண்டும். ஒருவேளை அமெரிக்கா நேரடியாக களத்தில் இறங்கினால் விடயத்தை வெற்றிகொள்ள முடியும். அதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, பிரேரணையின் உள்ளடக்கத்தை நாடுகளுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும்.

இதுதான், மனித உரிமைகள் பேரவையிலுள்ள அடிப்படையான பிரச்னையாகும். மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளின் விருப்பங்களுக்கு கட்டுப்பட்ட ஓர் அமைப்பாகும். பிரேரணையின் உள்ளடக்கத்திலுள்ள நியாயத்தின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. மாறாக, நாடுகளின் நீண்டகால நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் எடுக்கப்படும். இதனை விளங்கிக் கொள்ளாமல் விவாதங்கள் செய்வதில் பயனில்லை.

# ஜெனிவாவில் இலங்கை தொடர்பில்! வலுவான தீர்மானம் அவசியமானது!!

## உலக தமிழர் பேரவை வலியுறுத்து

*லண்டன், செப். 19*

*ஜெனிவாவில் நடைபெறும், மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் வலுவான தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென உலக தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.*

*இது தொடர்பில் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில்,*

*போரின் போது பெருமளவில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், அனைத்து சமூகங்களினதும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படவில்லை. மனித உரிமைகளுக்கான ஆணையாளரின் அலுவலகம் ஆற்றிய பங்கு இந்த விடயத்தில் முக்கியமானது. கடந்த மாதம் வரை ஆணையாளராக மிச்சேல் பச்லெட்டின் முன்மாதிரியான சேவைக்காக, பேரவை தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.*

*அத்துடன், புதிய உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கை பேரவை வரவேற்றுள்ளது. இலங்கையில் முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியானது, இனப் பிரச்னை மற்றும் யுத்தத்துடன் தொடர்புடைய பொறுப்பற்ற நிர்வாகத்தின் செயல்பாடுகள் என்பது, ஆணையாளரின் அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. ஆழமடைந்து வரும் இராணுவமயமாக்கல், நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையின்மை, பொறுப்புக்கூறல் இல்லாமை, மனித உரிமைகள் மீறல்களுக்கு தண்டனையில்லாமை மற்றும் ஊழல் என்பன அதிகார துஷ்பிரயோகத்துக்கான சூழலை உருவாக்கியுள்ளது.*

*எவ்வாறாயினும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கடுமையான அணுகுமுறையை அறிக்கை கடுமையாக விமர்சித்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாணவர் தலைவர்களை தடுத்து வைப்பதற்கும், நீண்டகாலமாக தமிழ் மற்றும் முஸ்லிம் கைதிகளைத் தொடர்ந்து தடுத்து வைப்பதற் கும் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவதாக ஆணையாளரின் அறிக்கை கூறுகிறது.*

*இலங்கையில் 2022 இல், பாதுகாப்புக்காக 373.1 பில்லியன் ரூபாய் அதாவது 1.86 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டன. இது மொத்த அரசாங்க செலவினத்தில் 15 சதவீதம் ஆகும். இது சுகாதாரத்துக்காக ஒதுக்கப்பட்டதை விட இரண்டு மடங்கு அதிகமாகும். பெரும் நிதி நெருக்கடியில் உள்ள ஒரு நாட்டில் இத்தகைய உயர் பாதுகாப்புச் செலவுகள் மற்றும் அதுவும் வடக்கு - கிழக்கில் குவிக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படுவதை ஆணையாளரின் அறிக்கை கண்டித்துள்ளது.*

*இந்த நிலையில், ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் எந்தவொரு வெளிப்புறப் பொறிமுறைக்கும் இணங்காது, இலங்கை அரசியலமைப்பின் கட்டமைப்புக்குள் உள்ளக உண்மையைத் தேடும் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் என இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியின் அறிவிப்பை சர்வதேச சமூகம் அவதானிக்க வேண்டும் என உலக தமிழர் பேரவை கேட்டுள்ளது.*


*இலங்கை தொடர்பான ஊடாடும் உரையாடலின் போது கருத்து தெரிவித்தமைக்காக இந்தியாவுக்கு தமிழர் பேரவை நன்றி தெரிவித்துள்ளது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் மூலம் இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வுக்கான அர்ப்பணிப்புகளில் இலங்கை அரசாங்கத்தால் அளவிடக் கூடிய முன்னேற்றம் இன்மை குறித்து இந்திய பிரதிநிதிகள் கவலை வெளியிட்டதை பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.*

*இதேவேளை இலங்கை ஒரு குறுக்கு வழியில் இருப்பதாக உலக தமிழர் பேரவை கருதுகிறது. துரதிஷ்டவசமாக, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள், ஆரோக்கியமான அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு உகந்ததாக இல்லை. எனினும் அதனை பொருட்படுத்தாமல், இலங்கை தொடர்பான பொறுப்புள்ள செயல்பாடுகள், சர்வதேச சமூகத்தால் மனசாட்சியுடன் ஊக்குவிக்கப்பட வேண்டும்.*

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமே இது சாத்தியமாகும். 2022 பெப்ரவரி மற்றும் செப்டம்பர் மாதங்களின் உயர் ஸ்தானிகரின் அறிக்கைகளில் பட்டியலிடப்பட்டுள்ள விரிவான பரிந்துரைகள், ஐக்கிய நாடுகளின் அமைப்புகளுக்கும் மற்றும் பொதுச் செயலாளருக்கும் உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்பட வேண்டும். அத்துடன், மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் பிற 3 தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கோரிக்கைகளான, மனித உரிமைகள் பேரவை, ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை ஆகிய இரண்டுக்கும் ஒரு நிபுணத்துவ பொறிமுறையை நிறுவுவதன் மூலம், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான ஆணையை வலுப்படுத்த முடியும் என்ற யோசனையை அங்கீகரிப்பதாக தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.*

*இந்தநிலையில், இலங்கையின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்த பரிந்துரைகளை வழங்குதல். தீர்மானத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய காலப்பகுதியில் இலங்கையின் பொறுப்புக்கூறலுக்கான போதுமான நிதியளிப்பது என்பன, இலங்கை தொடர்பான முக்கிய குழு உட்பட உறுப்பு நாடுகளின் பொறுப்பாகும் என்று உலக தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.* *(ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். விருப்பம் நிறைவேறும். இழுபறியாக இருந்த செயல் நிறைவேறும். எதிர்பார்த்த நன்மை உண்டு. குடும்பத்தினருடன் வெளியூர் செல்வீர்கள்.

**இடபம்**
குடும்பநலனில் அக்கறை கூடும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உங்கள் அணுகுமுறைகளை பிறர் பாராட்டுவர். பேச்சு வார்த்தையின் மூலம் பிரச்னைக்கு தீர்வு காண்பீர்கள். நன்மையான நாள்.

**மிதுனம்**
குழப்பம் அதிகரிக்கும். எதிலும் முடிவிற்கு வர முடியாமல் போகும். நினைப்பதை நிறைவேற்ற முடியாமல் போகும். யோசித்து செயல் படுங்கள். மனதில் பல்வேறு சிந்தனைக்கு இடம்தர வேண்டாம்.

**கடகம்**
வரவை விட செலவு அதிகரிக்கும். உங்கள் செயல்களில் கவனம் தேவை. வெளியூர் பயணம் செல்வீர்கள். அதனால் அலைச்சலும் செலவும் அதிகரிக்கும்.புதிய முயற்சி வேண்டாம்.

**சிம்மம்**
பொருளாதார நெருக்கடி அகலும். வராமல் இருந்த பணம் கைக்கு வரும். உங்களுக்குப் பிரியமானவரை சந்திப்பீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் வந்து சேரும். இழுபறியாக இருந்த செயல் இன்று நிறைவேறும்.

**கன்னி**
வியாபாரத்தில் இருந்த நெருக்கடி விலகும். விருப்பம் நிறைவேறும். நண்பர் உதவியால் நினைத்தது நிறைவேறும். பணி புரியும் இடத்தில் செல்வாக்கு உயரும். உடன் பணிபுரிவோரின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**துலாம்**
இரண்டு நாளாக இருந்த நெருக்கடி விலகும். உங்கள் செயல்களில் தெளிவு உண்டாகும். யோசித்து செயல்பட்டு முயற்சியில் வெற்றி அடைவீர்கள். தடைகள் விலகும். பெரியவர்களின் ஆதரவு உண்டு.

**விருச்சிகம்**
விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். சில சங்கடங்களை சந்திப்பீர்கள். வாகன பயணத்தில் கவனம் தேவை. எதிர்பாராத சங்கடம் குறுக்கிடலாம் குடும்பத்தில் நெருக்கடியை சந்திப்பீர்கள்.

**தனுசு**
மனம் மகிழும் சம்பவம் நடக்கும். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். நண்பர் உதவியுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள். எதிர் பார்ப்பு எளிதாக நிறைவேறும்.

**மகரம்**
எதிர்ப்பு அகலும். சுறுசுறுப்பாக செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தனித்தன்மை இன்று வெளிப்படும். தடைபட்ட செயல்களை நிறைவேற்றி முடிப்பீர்கள். எதிர்பார்த்த தகவல் வரும்.

**கும்பம்**
உறவினர் ஆதரவால் முயற்சியில் வெற்றியடைவீர்கள். பணவரவு திருப்தியாகும். தள்ளிப் போன முயற்சி இப்போது நிறைவேறும். நிதிநிலை சிறப்பாக உயரும். குடும்பச்சொத்து பிரச்னையை பேசித் தீர்ப்பீர்கள்.

**மீனம்**
நிதானமுடன் செயல்பட வேண்டிய நாள். முயற்சியில் முழுகவனம் செலுத்துங்கள். உறவுகளால் டென்ஷன் அதிகரிக்கும். நண்பரின் ஆதரவால் சங்கடம் தீரும். மனக் கட்டுப்பாடு தேவை.

# இலங்கைக்கு இந்தியா கண்டனம்! பின்னணியில் அண்ணாமலை!!

சென்னை, செப். 19

ஐ. நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இந்தியா இலங்கையை கண்டித்தமைக்கு பின்னணியில் தமிழக தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை இருக்கிறார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த செய்திகளில்,

விடுதலைப் புலிகள் அமைப்பை ஒருபோதும் ஆதரிக்காத, பா.ஜ., ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு என்பதை வலியுறுத்தி வந்தது. இந்நிலையில், 12ஆம் திகதி ஜெனிவாவில் நடந்த ஐ. நா., மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் பேசிய இந்திய தூதர், “ஈழத் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவதற்காக, இலங்கை அரசியலமைப்பு சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயல்படுத்துதல், மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரம், மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்துதல் போன்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், எந்த முன்னேற்றத்தையும் இலங்கை அரசு எட்டவில்லை” என்று குற்றம் சாட்டினார்.

மேலும், ஐ.நா., கூட்டத்தில், “ஒருங்கிணைந்த இலங்கைக்குள், தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பதே, இந்தியாவின் நிலைப்பாடு. இதை இலங்கை உறுதி செய்ய வேண்டும்“ என்று, கண்டிப்புடன் இந்திய தூதர் பேசியுள்ளார். மத்திய பா.ஜ., அரசின் இந்த கண்டிப்பு பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இலங்கையை சீனா ஆதரிப்பதால் தான், இந்தியா தன் நிலைப்பாட்டை மாற்றியதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஆனாலும், ஐ. நாவில் மத்திய அரசின் நிலைப்பாட்டை எதிர்க்கட்சிகளும் வரவேற்றுள்ளன.

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி, இலங்கைக்கு பயணம் மேற்கொண்டார். அங்கு, இலங்கை மக்களை இந்தியா ஒருபோதும் கைவிடாது. உங்களின் துயரங்கள் அனைத்தும் விரைவில் விடுபடும்“ என்றார். இலங்கை பயணம் குறித்த விரிவான அறிக்கையை, அமித்ஷா, பா.ஜ. க. தேசிய தலைவர் நட்டாவிடம் அண்ணாமலை அளித்திருந்தார்.

இந்நிலையில், ஐ.நா., மனித பேரவையில் இலங்கை பற்றிய விவாதம் நடப்பதையொட்டி, தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலையிடம் ஆலோசிக்குமாறு, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரிடம், பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் கூறியுள்ளனர்.

அதன்படி, தன்னிடம் ஆலோசித்த ஜெய்சங்கரிடம் அண்ணாமலை, “விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாத நிலையில், நாம் முழுமையாக தமிழர்கள் பக்கம் நிற்பது தான் சரியானது. இலங்கை தமிழர்கள் மோடியை தான் நம்பியுள்ளனர். “எனவே, 13ஆவது சட்டத்திருத்தத்தை அமல்படுத்துதல், மாகாணங்களுக்கு தேர்தல் நடத்தி அரசியல் அதிகாரம் வழங்குதல் போன்ற அடிப்படையான கோரிக்கைகளை, இந்தியா வலியுறுத்த வேண்டும்.

இதைத்தான் தமிழக மக்களும் விரும்புகின்றனர்“ என கூறியுள்ளார். அதைத் தொடர்ந்தே, ஐ.நா., மனித உரிமை பேரவை கூட்டத்தில், “கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை“ என கண்டித்ததுடன், “இலங்கை தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம், சமநீதி, சமத்துவத்தை உறு திப்படுத்த வேண்டும்“ என இந்தியா வலியுறுத்தியுள்ளது - என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஐ)

# 2024இல் அலங்கா நல்லூரில் ஜல்லிக்கட்டு மைதானம்!

மதுரை, செப். 19

2024ஆம் ஆண்டுக்குள் ஜல்லிக்கட்டு வளாக அரங்கப் பணிகளை முடிப்பதற்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இதன் அடிப்படையில் இரவு - பகல் பார்க்காமல் பணிகள் நடைபெறும் என்று பொதுப் பணி துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

மதுரை மாவட்ட ஜல்லிக்கட்டுப் போட்டிகள் உலக பிரசித்திப் பெற்றவை. இந்தப் போட்டிகளை அனைவரும் கண்டுகளிக்கும் வகையில் பிரமாண்டமான ஜல்லிக்கட்டு மைதானம் அமைக்கவுள்ளதாக தமிழக அரசு அறிவித்து இருந்தது.

இந்த மைதானம் அமைவதற்கான இடம் நேற்று இனங்காணப்பட்டது. இதைத் தொடர்ந்து தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எ.வ.வேலு, “தென்னகத்தின் வீர விளையாட்டு, மக்களால் மிகவும் விரும்பப்படும் விளையாட்டு ஜல்லிக்கட்டு. தென்னக மக்களின் மனநிறைவடையும் வகையில் தமிழக முதல்வர் அலங்காநல்லூர் பகுதியில் ஜல்லிக்கட்டு மைதானம் - வளாகம் அமைத்து விடுவோம்.

ஜல்லிக்கட்டு நடைபெறும் அலங்காநல்லூர் பகுதியின் அருகிலேயே மைதானம் அமைக்க வேண்டும் என கேட்டுகொண்டதன்படி தற்போது இந்த இடத்தை தேர்வு செய்துள்ளோம் - என்றார். (ஐ)

# மோடி பெரியாராக மாறி வந்தால் நல்லது

## திருமாவளவன் தெரிவிப்பு

சென்னை, செப். 19

பிரதமர் மோடி பெரியார் ஆக மாறி வந்தால் நல்லது தான் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறினார்.

சென்னையில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர்,

எதிர்வரும் 28ஆம் திகதி மதுரையிலும், ஒக்ரோபர் 8ஆம் திகதி கோவையிலும் காங்கிரஸ், தி. மு. க, இடதுசாரிகள் மற்றும் தோழமை கட்சிகளுடன் சேர்ந்து “சனாதன சக்திகளை தனிமைப்படுத்துவோம்” எனும் கருப்பொருளில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது”.

பிரதமர் மோடி பெரியார் ஆக மாறி வந்தால் நல்லது தான். சனாதான எதிர்ப்பாளியாக பிரதமர் மோடி வந்தால் அவரை இரத்தின கம்பளம் விரித்து வரவேற்போம். சமூகப் புறக்கணிப்பு என்பது பெரிய கொடுமை. பள்ளி பிள்ளைகள் மீது சாதி வெறியாட்டம் நடத்தியவர்கள் மீது கடுமையான நடவ டிக்கை எடுக்க வேண்டும் - என்றும் கூறினார்.

(ஐ)

# மீண்டும் தமிழகம் வருகிறார் ராகுல்!

சென்னு, செப்.

பாதயாத்திரை பயணத்தில் தற்போது ஈடுபட்டுள்ள காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அந்தப் பயணம் நிறைவுற்ற பின்னர் மீண்டும் தமிழகம் வரவுள்ளார்.

காங்கிரஸ் எம். பி. ராகுல் காந்தி கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை 3500 கி. மீற்றர் ஒற்றுமைக்கான நடைபயணம் மேற்கொள்கிறார். தனது நடைபயணத்தை கடந்த 7ஆம் திகதி கன்னியாகுமரியில் தொடங்கினார்.

தொடர்ந்து கன்னியாகுமரி முழுவதும் நடைபயணம் மேற்கொண்டார். அப்போது அவருடன் காங்கிரஸ் கட்சியினரும் பங்கேற்றனர். கன்னியாகுமரியில் இருந்து, நேராக கேரளாவுக்கு சென்றார். அங்கு 11ஆம் திகதி முதல் பாதயாத்திரை மேற்கொண்டு வருகிறார்.

கேரளாவில் பாத யாத்திரையை முடித்துக்கொள்ளும் ராகுல் காந்தி மீண்டும் தமிழகம் வருகிறார். வருகிற 29ஆம் திகதி நீலகிரி மாவட்டம் கூடலூரில் அவர் நடைபயணம் மேற்கொள்ளவுள்ளார். (ஐ)



## பயங்கரவாத சட்டத்தை எதிர்த்து வவுனியாவில் கையொப்பங்கள்!

வவுனியா, செப். 19

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரிய ஊர்தி வழி கையெழுத்து போராட்டம் நேற்று வவுனியாவை சென்றடைந்தது.

இலங்கை தழிழ் அரசு கட்சியின் வாலிபர் முன்னணி மற்றும் , சர்வஜன நீதி அமைப்பு இணைந்து முன்னெடுத்து வரும் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரையான ஊர்திவழி கையெழுத்து போராட்டம் நேற்று வவுனியாவை சென்றடைந்தது.

வவுனியாவில் தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகமான தயாகத்தில் இந்தப் போராட்டம் ஆரம்பமாகி, பின்னர் வவுனியா நகரின் பல பாகங்களிலும் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா கிளையின் முக்கியஸ்தர்கள், பொது மக்கள் என பலர் கலந்துகொண்டு தமது ஆதரவை வழங்கியிருந்தனர். (ஐ)



## முல்லைத்தீவை அடைந்தது தியாகி திலீபன் ஊர்தி பவனி

முல்லைத்தீவு, செப். 19

பொத்துவிலில் ஆரம்பமான தியாக தீபம் திலீபன் ஊர்தி பவனி நேற்று முல்லைத்தீவு நகரத்தை வந்தடைந்தது.

“திலீபன் வழியில் வருகிறோம்”, என்ற தொனிப் பொருளிலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்படும் இந்த ஊர்தி பவனி கடந்த 15ஆம் திகதி ஆரம்பமானது.

நேற்றுக் காலை முல்லைத்தீவை அடைந்த இந்த ஊர்தியை வரவேற்ற மக்கள் மலர் தூவி தமது அஞ்சலிகளை செலுத்தினர். இந்தி ஊர்தி தியாக தீபம் திலீபன் உயிர் நீத்த நாளான எதிர்வரும் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் - நல்லூரை சென்றடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாதையில் இருந்தவர் ரயில் மோதி மரணம்!

வவுனியா, செப். 19

ரயில் பாதையில் அமர்ந்திருந்தவர் ரயில் மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான எஸ். நகுலன் என்பவரே மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயில் இரவு 10 மணியளவில் ஓமந்தை, விளக்குவைத்தகுளம் பகுதியில் பயணித்த போது ரயில் பாதையில் இருந்தவரை மோதி தள்ளியது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே அந்த குடும்பஸ்தர் மரணமானார்.

சடலம் புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு, வவுனியா புகையிரத நிலையத்தில் வைத்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் சடலத்தை வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உச்சத்தில் போதை பாவனை!

- *10 பேர் உயிரிழப்பு*
- *அடிமையான 320 பேர் மறியலில்*

**யாழ்ப்பாணம், செப். 19**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோயின் பயன்படுத்திய 10 பேர் இதுவரை உயிரிழந்தனர். இதற்கு அடிமையான 320 பேர் வரையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.**

அத்துடன் யாழ். போதனா மருத்துவமனையில் ஹெரோயினுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலையம் திறக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் 134 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், யாழ். மாவட்டத்தில் 20 கிராமங்களைச் சேர்ந்த பலரும் ஹெரோயின் பாவனைக்கு முற்றாக அடிமையாகியுள்ளனர் என்ற அதிர்ச்சி தகவலும் வெளியாகியுள்ளது.

ஹெரோயினுக்கு அடிமையானவர்களில் அதிகமானோர் 18 - 23 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதுடன், யாழ். நகரிலுள்ள பிரபல பாடசாலைகளின் மாணவர்களும் இதற்குப் பழக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிய வருகின்றது.

கொரோனா, பொருளாதார நெருக்கடி எனப் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் யாழ். குடாநாட்டில் உயிர் கொல்லிப் போதைப் பொருளான ஹெரோய்ன் பயன்பாடு பல்கிப் பெருகியுள்ளது.

கொழும்பிலிருந்து தொடர்ச்சியாக உயிர்கொல்லி ஹெரோயின் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படுகின்றது. இங்குள்ள பல நூற்றுக் கணக்கான முகவர்கள் ஊடாக அவை குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

உயிர்கொல்லி ஹெரோயினை ஊசி மூலமே அதிகளவானோர் பயன்படுத்துகின்றனர். ஒரு நாளைக்கு 30 மில்லி கிராம் தொடக்கம் 300 மில்லி கிராம் வரையில் நுகர்கின்றனர்.

18 - 23 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களே உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெரோயினை அதிகளவில் நுகர்கின்றனர். இதனைத் தவிர பாடசாலை மாணவர்களும் நுகர்கின்றனர்.

ஹெரோயின் நுகரும் பெரும்பாலான இளைஞர்களின் பெற்றோர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து தாமே தமது பிள்ளைகளை பொலிஸில் ஒப்படைக்கின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. சில பெற்றோர் மருத்துவமனைகளிலும் தமது பிள்ளைகளை ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஹெரோயின் பாவனைக்கு அடிமையான சுமார் 320 பேர் வரையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். உயிர்கொல்லி ஹெரோயினுக்கு அடிமையானமையால் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைதானவர்களும் இதற்குள் உள்ளடங்குகின்றனர்.

உயிர் கொல்லி போதையான ஹெரோயின் பாவனைக்கு அடிமையானவர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்வதால், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசேட சிகிச்சைப் பிரிவு இரு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு இது வரை 134 பேர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சுமார் 20 கிராமங்கள் ஹெரோயின் போதைக்கு அடிமையானவர்களின் கூடாரமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்களிலுள்ள இளைஞர்களில் அநேகர் இதனைப் பயன்படுத்துகின்றமையும் பல்வேறு தரப்புக்கள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்லும் இந்தப் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான முறையான வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் முன்வரவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## கசிப்பு காய்ச்சிய நபர் ஆனைக்கோட்டையில் கைது!

யாழ்ப்பாணம், செப். 19

கசிப்பு காய்ச்சிய ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று கைது செய்தனர். அவரிடமிருந்து 50 லீற்றர் கோடா, 8 லீற்றர் கசிப்பு, 3 வாள்கள் என்பவை கைப்பற்றப்பட்டன.

ஆனைக்கோட்டை - ஆறுகால்மடத்தில் நீண்டநாட்களாக கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.



இதையடுத்து, யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த நடவடிக்கையில் 38 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து, 50 லீற்றர் கோடா, 8 லீற்றர் கசிப்பு, 3 வாள்கள் மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

# ஆளும் கட்சியின் 20 எம். பிக்கள் இம்மாதம் என்னுடன் சேர்வார்கள்!

## குமார வெல்கம எம். பி.



**கொழும்பு, செப். 19**

**பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்படும் தரப்பினர், ஆளும் தரப்பு உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 20 பேர் இந்த மாத இறுதிக்குள் என்னுடன் ஒன்றிணைவார்கள்.**

அறிவார்ந்த மக்கள் இனி யொருபோதும் ராஜபக்ஷர்களிடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்கமாட்டார்கள் என புதிய லங்கா சுதந்திர கட்சியின் தலைவர் குமார வெல்கம தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்படும் அனைவரும் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களாவர். சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக 2015 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியுடன் தேசிய அரசாங்கம் என்ற கூட்டணியில் ஒன்றிணைந்தால் சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் கட்சியில் இருந்து வெளியேறி பொது ஜன பெரமுன கட்சியை உருவாக்கி ஒன்றிணைந்தார்கள்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கும் சுதந்திர கட்சியின் கொள்கைக்கும் இடையில் பெரிய வேறுபாடு இருந்த காரணத்தாலும், கோட்டாபய ராஜபக்ஷவை 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கும் ஆரம்பகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாலும் பொது ஜன பெரமுனவின் உறுப்பினராக நான் அங்கத்தும் ஏற்கவில்லை.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் நாட்டு மக்கள் இரண்டரை வருட காலத்துக்குள் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி பெரும்பாலானோர் தற்போது பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்படுகிறார்கள்.

சுயாதீன தரப்பினர், ஆளும் தரப்பினர் உட்பட 20 பேர் இந்த மாதம் இறுதிக்குள் புதிய லங்கா சுதந்திர கட்சியில் ஒன்றிணைவார்கள். மைத்திரிபால சிறிசேனவால் பிளவுப்படுத்தப்பட்ட சிறீ லங்கா சுதந்திர கட்சியை நிச்சயம் ஒன்றிணைப்பேன். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆலோசனைக்கு அமைய அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் திறமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சிறந்த முறையில் செயல்பட பொதுஜன பெரமுனவினர் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். ஆகவே எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்கு பிறகு ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்து தனக்கான அரசாங்கத்தை தெரிவு செய்துகொள்ள வேண்டும்.

ராஜபக்ஷர்களின் நிர்வாகம் எத்தன்மையானது என்பதை நாட்டு மக்கள் அனுபவ ரீதியில் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள். அறிவார்ந்தவர்கள் இனியொரு போதும் ராஜபக்ஷர்களிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கமாட்டார்கள் - என்றார். (ஐ)

### எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்:

# இழப்பீடு பெறும் நடைமுறையை பரிசீலிக்குமாறு ஆலோசனை

கொழும்பு, செப். 19

நாட்டின் கடல் எல்லையில் தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதத்துக்கான இழப்பீட்டை பெற்றுக்கொள்ளும் நடைமுறைகள் தொடர்பில் பரிசீலிக்குமாறு கணக்காய்வாளர் நாயகம் ஆலோசனை வழங்கியுள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் இழப்பீட்டை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை தொடர்பாக பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்தில்கொண்டு இதனை தெரிவிப்பதாக கணக்காய்வாளர் நாயகம் சூலந்த விக்ரமரத்ன தெரிவித்தார்.

இது குறித்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட சேதத்துக்கான இழப்பீட்டுத் தொகையை வசூலிக்கும் நடவடிக்கை குறித்து முழு மையான விசாரணை நடத்த எதிர்பார்ப்பதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் இலங்கைக் கடலில் மூழ்கி ஒரு வருடமும் 3 மாதங்களுக்கும் மேலாகிறது. குறித்த கப்பலில் ஆபத்து மிக்க பொருட்கள் அடங்கிய 81 கொள்கலன்கள் காணப்பட்டதுடன், 25 தொன் நைத்ரிக் அமிலமும் அடங்கியிருந்தது.

கப்பல் தீப்பற்றியதால் மன்னாரிலிருந்து அம்பாந்தோட்டை கிரிந்த கரையோரப் பகுதி வரையில் சுமார் 746 கிலோ மீற்றர் தூரம் வரை பாதிக்கப்பட்டது. (ஐ)

# கடலாமை சடலமாக கரை ஒதுங்கியது!

கொழும்பு, செப். 19

கம்பஹா - பமுனுகம, சரக்குவ கடற்கரைப் பகுதியில் கடலாமை ஒன்று இறந்த நிலையில் நேற்று முன்தினம் கரையொதுங்கியது.

நான்கு அடி நீளமும் 30 கிலோ கிராம் எடையும் கொண்ட குறித்த கடலாமை உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம், அமிலத் தன்மை வாய்ந்த பொருட்களை ஏற்றிவந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் என்ற கப்பல் தீக்கிரையாகி மூழ்கியது. இந்நிலையில், இந்த ஆமையின் சடலத்தால் பாதிப்பு இப் போதும் தொடர்கிறதா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. (ஐ)

# இந்து ஆலயங்கள்மீதான தொல்பொருள் துறையின் நடவடிக்கைகளை தடுக்குக!

## மட்டக்களப்பில் கையெழுத்து சேகரிப்பு

மட்டக்களப்பு, செப். 19

இந்து ஆலயங்களில் தொல்பொருள் திணைக்களம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு கோரி ஜனாதிபதிக்கு மனு அளிப்பதற்காக கையொப்ப சேகரிப்பு நடத்தப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை முன்னெடுக்கும் இந்த கையொப்ப சேகரிப்பு அந்த அமைப்பு தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்று வருகிறது.

அந்த மனுவில், கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் தேவாரப் பாடல் பெற்ற தலமும் இராவணனால் வழிபடப்பட்ட தலமும் இலங்கையில் விஜயனின் வருகைக்கு முற்பட்ட தலமுமான திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம் தற்போது தொல்பொருள் திணைக்களத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆலய அபிவிருத்திகள் இவர்களால் தடுக்கப்படுகின்றது. இதேவேளை பதினெட்டு ஏக்கர் பரப்பளவு உடைய இவ் ஆலய எல்லையில் தொல்பொருள் திணைக்களம் பெரும்பான்மை இனத்தின் வியாபார நிலையங்களுக்கு அனுமதி வழங்கி ஆலய பரிபாலன சபையினருக்கு பிரச்னையை தோற்றுவிக்கின்றனர்.

எனவே, இன, மத பேத மற்று செயல்படும் தாங்கள் இந்த ஆலயத்தை தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பதுடன் ஆலய பரிபாலன சபை சுயமாக தமது வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவும், அத்துமீறி ஆலய காணியில் அமைக்கப்பட்டிருக்கும் வியாபார நிலையங்களை அகற்றவும் நடவடிக்கை மேற்கொண்டு உதவுமாறு கிழக்கு மாகாண இந்துக்களாகிய நாங்கள் தங்களை பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் சங்கமக்கண்டி மலை தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தாந்தா மலை, இசானமலை, வேல் ஒடு மலை மைல்தங்கிய மலை, குடும்பி மலை உட்பட திருகோணமலை மாவட்டத்தில் கல்லடி நீலியம்மன் மலை, குஞ்சிதபாத மலை (இலங்கைத் துறை முகத்துவாரம்), கங்கு வேலி அகஸ்தியர் ஸ்தாபனம், திரியாய் மலை உட்பட கிழக்கு மாகாணத்தில் இருந்து இந்து ஆலயங்கள் அமைந்துள்ள பகுதிகளையும் இந்துக்களின் பூர்வீக இடங்களையும், வடக்கே குருந்தூர் மலை உட்பட்ட இந்து ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களையும் இந்துக்களின் பூர்வீக இடங்களையும் தொல்பொருள் என்ற வகையில் கடந்த கால இத்துவேச அரசாங்கங்கள் சுவீகரிக்க மேற்கொண்ட நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி இவற்றை தொல்பொருள் திணைக்கள செயற்பாட்டில் இருந்து விடுவித்து இந்துக்களின் புனித நடவடிக்கைகளுக்கு உதவி நல்குவதுடன் இந் நாட்டு பூர்வீக குடிகளும் இந்நாட்டு தேசிய இனமுமான நாங்கள் இன மத முரண்பாடு அற்று அனைத்து மக்களையும் இந் நாட்டு மக்களாக கருதும் மனம் படைத்த தங்களிடம் அன்புடன் வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# 125 கைபேசிகளை திருடியவர் பொலிஸாரால் கைதானார்!

கொழும்பு, செப். 19

கொழும்பில் பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர் தெமட்டகொடையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பல குற்றச் சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தெமட்டகொடையை சேர்ந்த அந்த நபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்துடன், 125 கைபேசிகள் மற்றும் உதிரிப் பாகங்கள், 10 மடிக்கணனிகள், ஒரு பியானோ, ஒரு கிற்றார், 520 கைக்கடிகாரங்கள் மற்றும் பாகங்கள், மூன்று தொலைக் காட்சிகள் மற்றும் ஒரு வாள் உட்பட 90 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# மாற்றுத் திறனாளிப் பெண்ணை காணவில்லையென முறைப்பாடு!

ஓட்டமாவடி, செப். 19

மாற்று திறனாளி பெண் ஒருவரை 9 நாட்களாக காணவில்லை என்று அவரின் குடும்பத்தினர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஓட்டமாவடி - மீராவோடை-04 ஹாஜியார் வீதியை சேர்ந்த ஏ. ஐ. பாத்திமா சம்ஹா என்ற இந்தப் பெண் 23 வயதுடையவர் என்றும் இவர் கடந்த 10ஆம் திகதி வீட்டில் இருந்து வைத்திய சாலைக்கு சென்று வருவதாகக் கூறிச் சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை.

இவரை கண்டவர்கள் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கமான 065 225 7709 என்ற இலக்கத்துக்கோ அல்லது அவரது குடும்பத்தாரின் இலக்கமான 077 372 7293 என்ற இலக்கத்துக்கோ அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




# 100 நாள் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று மன்னாரில் முன்னெடுப்பு!

மன்னார், செப். 19

'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' எனும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்படும் 100 நாள் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று மன்னாரில் நடைபெற்றது.

போராட்டம் ஆரம்பித்த 49ஆவது நாளான நேற்றைய தினம் மன்னார் மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும்.

எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, என கோஷங்களை எழுப்பியதுடன் உரிமை கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, நானாட்டான் பிரதேச சபையின் உப தவிசாளர் லூர்து நாயகம் புவனம், பிரதேச சபை உறுப்பினர் சிறி, சட்டத்தரணி, குறித்த கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் பணியாளர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

# ஐ. நாவின் விடயங்களை நிராகரிக்கவே முடியாது!

## சுதந்திர கட்சி பொதுச் செயலர்

கொழும்பு, செப். 19

**பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முன்வைத்துள்ள விடயங்களை நிராகரிக்க முடியாது. பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபட்ட அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்தவர்களே தற்போதைய அரசாங்கத்திலும் இருக்கின்றனர்.**

எனவேதான் அரசாங்கம் இதனை மறுத்துள்ளது. ஆனால், பொருளாதார குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் உள்நாட்டு பொறிமுறையின் ஊடாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் என்று சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்றுள்ள பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் வின் நிலைப்பாட்டை வினவிய போதே தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இதுவரையில் யுத்தக் குற்றங்கள் தொடர்பிலும் , அதன் போது இடம்பெற்றவை எனக் குறிப்பிடப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பிலும் மாத்திரமே பேசப்பட்டு வந்தது.

இந்தக் காரணிகள் தொடர்பில் கடந்த ஜெனிவா கூட்டத் தொடரின் போது கூட இலங்கைக்கு எதிரான பிரேரணையொன்று நிறைவேற்றப் பட்டது. இம்முறை கூட்டத்தொடரிலும் இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணையொன்று கொண்டு வரப்படவுள்ளது.

இவ்வாறு கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளையும் , இனி வரப்போகும் பிரேரணைகளையும் எதிர்கொள்வது என்ற பாரிய சவாலை நாடு எதிர்கொண்டுள்ளது.

இந்த சவால்களுக்கு மத்தியில் இம்முறை ஐ.நா.வில் பொருளாதார குற்றங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. வரலாற்றில் முதன் முறையாக பொருளாதார குற்றங்களால் இலங்கையில் இடம்பெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. அவதானம் செலுத்தியுள்ளது.

எனவே, கடந்த காலங்களை விட தற்போது முன்வைக்கப் படவுள்ள பிரேரணை இலங்கைக்கும் கடும் பாதகமானதாக அமையக்கூடும். எவ்வாறிருப்பினும் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. அறிக்கையில் ஆழமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் சரியான தீர்மானங்களை எடுக்காமை மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் பொறுப்பு கூறத்தவறியுள்ளமை உள்ளிட்ட காரணிகள் குறித்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

ஆனால், மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்குள்ள ஆணையின் படி அவரால் மனித உரிமைகள் மாத்திரமே பேச முடியும் என்பதால், பொருளாதார குற்றங்கள் தொடர்பில் முன்வைத்துள்ள காரணிகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று எமது அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த பதில் பொறுத்தமற்றதாகும். பொருளாதார ரீதியில் எடுக்கப்பட்ட முட்டாள் தனமான தீர்மானங்களே நாடு இவ்வாறு வங்குரோத்தடைந்துள்ள மைக்கான பிரதான காரணியாகும். அவ்வாறிருக்கையில் எவ்வாறு அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூற முடியும்?

உண்மையில் பொருளாதாரக் குற்றங்கள் இடம்பெற்ற அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்தவர்களே தற்போதைய அரசாங்கத்திலும் உள்ளனர். எனவேதான் அவர்கள் ஐ. நா. அறிக்கைக்கு எதிர்ப்பை வெளியிடுகின்றனர். இலங்கையின் பொருளாதாரம் தொடர்பில் சர்வதேசத்தில் கேள்வி எழுப்பப்படுகின்றமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

இருந்த போதிலும் , ஐ.நா. வலியுறுத்தியுள்ள விடயம் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். ஏனைய விவகாரங்களைப் போன்றே பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பிலும் உள்நாட்டு பொறிமுறையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு , தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

# அரச கட்டடங்கள் தொடர்பில் தேசிய கொள்கை அவசியம்!

## கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரை

கொழும்பு, செப். 19

அரச கட்டடங்கள் தொடர்பில் தேசிய கொள்கை ஒன்று உடனடியாக உருவாக்கப்பட வேண்டுமென கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரை செய்துள்ளார்.

அரச நிறுவனங்களுக்கான கட்டடத் தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்தே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

2021 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரையில், கூட்டுத்தாபனஙகள், சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் திட்டங்கள் உட்பட 142 அரச நிறுவனங்களின் 1,166 கட்டடப் பயன்பாடுகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரசாங்கத்தால் உரிய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 720 பில்லியன் ரூபாய் மூலதன ஒதுக்கீட்டில், 482 பில்லியன் ரூபாய் குறித்த கட்டடங்களின் தேவைகளுக்காக செலவிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது அரசின் மூலதன ஒதுக்கீட்டில் 14 முதல் 16 வீதம் வரை உள்ளதாக கணக்காய்வாளரின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரச பணிகளுக்கான கட்டடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது, அரசாங்கத்தின் விலை மதிப்பு திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டைப் பொருட்படுத்தாமல் குத்தகை செலுத்தப்படுவதாகவும் அங்கீகரிக்கப்பட்ட குத்தகை தொகையை விட அதிகமாக செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க கட்டடங்கள் உட்பட நிதியல்லாத சொத்துக்களுக்கு முழுமையாக மையப்படுத்தப்பட்ட தகவல் அமைப்பைப் பேணுவதற்காக 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிதி அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட கட்டுப்பாட்டு நாயக திணைக்களம், எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை என கணக்காய்வாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த144 நிறுவனங்களில், 71 நிறுவனங்கள் மாத்திரமே குத்தகை அடிப்படையில் தமது கட்டடங்களை பயன்படுத்துவதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 144 நிறுவனங்களில் 118 நிறுவனங்கள், இணக்கச் சான்றிதழ் இல்லாத கட்டடங்களுக்கு உரிமை கோருவதும் தெரியவந்துள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 144 நிறுவனங்களில், 10 நிறுவனங்கள் தமக்கு சொந்தமான 87 கட்டடங்களை வெளித்தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ள போதிலும் அதற்கான குத்தகையை அரசாங்க விலை மதிப்பு திணைக்களத்தால் மதிப்பீடு செய்யவில்லை.

8 அரச நிறுவனங்கள் தமது கட்டடங்களை உரிய தொகையை மதிப்பிடாமல் தனியாருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளமையும் தெரியவந்துள்ளது. (ஐ)

# மூன்று நாட்களில் மட்டும் 75 இலட்சம் ரூபாய் வருவாய்!

கொழும்பு, செப். 19

கொழும்பு தாமரை கோபுரம் திறந்து வைக்கப்பட்ட மூன்று நாட்களில் 75 இலட்சம் இலங்கை ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது என்று தாமரைக் கோபுர நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தாமரை கோபுரம் கடந்த 15ஆம் திகதி பொதுமக்கள் பார்வையிடுவதற்காக திறந்து வைக்கப்பட்டது. நேற்று வரையான மூன்று நாட்களுக்குள் சுமார் 14, ஆயிரம் பேர் கோபுரத்தை பார்வையிட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# தமிழ் பரப்பும் பெரியார்!

கே.பி. இராமலிங்கம்

நமக்கு நாமே நற்றமிழ் குறித்து பேசிப் புளகாங்கிதம் அடைந்து வருகிறோமே தவிர, அதன் தொன்மையையும், சிறப்பையும், பெருமையையும் தமிழகத்துக்கு வெளியே எடுத்துச் செல்லத் தவறிவிட்டோம். தமிழ், தமிழினம் என்று பேசி அரசியல் நடத்தி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் மட்டுமே குறியாக இருந்து வந்திருக்கின்றன தமிழகத்தின் திராவிட இயக்க அரசியல் கட்சிகள். தமிழைத் தேங்கிய குட்டையாக்கி அதில் அரசியல் ஆதாயம் பார்த்ததன் விளைவு, இன்றைய தலைமுறை இளைஞர்களுக்குத் தவறில்லாமல் தமிழில் பேசவோ, எழுதவோ முடியவில்லை என்பதுடன், படிக்கக்கூடத் தெரியவில்லை.

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை', 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' என்பவை மகாகவி பாரதியார் கண்ட கனவு. அந்தக் கனவை திராவிட இயக்க அரசியல்வாதிகள் நிறைவேற்றவில்லை. அதற்காகத் தமிழகம் காத்திருந்தது.

பாரத பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்ற பிறகுதான் தமிழகத்தின் எல்லைக்கு வெளியே தமிழின் அருமை பெருமைகள் தெரியத் தொடங்கின. தனக்குக் கிடைத்த வாய்ப்பு எதுவாக இருந்தாலும் மிக அதிகமாக பிரதமர் நரேந்திர மோடியால் மேற்கோள் காட்டப்படும் மொழியாகத் தமிழ் உயர்ந்திருக்கிறது. தமிழ் என்றொரு மொழி இருக்கிறதா என்றுகூடத் தெரியாதவர்கள் மத்தியில் தமிழின் பழம்பெருமையை மேற்கோள்கள் மூலம் அவர் எடுத்தியம்பி, அதன் பொருளை விளக்கிக்கூறி ஆற்றும் உரைகள் அவரை தமிழ் பரப்பும் பெரியாராக உயர்த்தி இருக்கின்றன.

2019, செப்டம்பர் 7-ஆம் திகதி ஐ.நா. சபையில் உரையாற்றிய இந்திய பிரதமர் நரேந்திர மோடி, கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சங்க இலக்கிய வரிகளை மேற்கோள் காட்டி 'எங்கள் நாட்டைச் சேர்ந்த தமிழப் புலவரான கணியன் பூங்குன்றனார், நாம் அனைத்து இடங்களுக்கும் - அனைவருக்கும் சொந்தமானவர்கள் என்னும் பொருள்பட மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடியிருக்கிறார்' என்று பெருமையோடு குறிப்பிட்டார். இந்தக் கருத்தை பிரதமர் மோடி முழக்கமிட்ட போது - 192 உலக நாடுகளின் ஐ.நா. பிரதிநிதிகள் கரவொலி எழுப்பி நமது பிரதமர் சுட்டிக் காட்டிய கருத்தை வரவேற்றனர்.

'தமிழ்மொழி எனக்கு மிகவும் பிடிக்கும் இந்த மொழியின் ரசிகன் நான் உலகின் பழைமையான தமிழ் மொழி தமிழ் கலாசாரத்தின் பெரிய அபிமானி நான் தமிழ் மீதான என் அன்பு என்றும் குறையாது. தமிழ் குறித்து எனக்கு மிகவும் பெருமிதம் உள்ளது' என்று பிரதமர் மோடி 'மன் கி பாத்' நிகழ்ச்சியில் உரை நிகழ்த்தித் தன்னுடைய உள்ளத்தின் உணர்வுகளை தெளிவாகவும் திடமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் ஹிந்தியில் ஆற்றும் அந்த உரையை இந்தியாவின் அனைத்து மாநில மக்களும் கேட்டார்கள். அதனால் மாநில எல்லைக்கு வெளியே தமிழின் பெருமை பரவியது.

கடந்த காலங்களில் இந்தியாவை ஆண்ட பிரதமர்கள், தலைவர்கள் தமிழகம் வரும்போதெல்லாம் - 'வணக்கம்' 'நன்றி' 'நல்லா இருக்கீங்களா' என்றுதான் தமிழ்நாட்டு மக்களை கேட்டிருக்கிறார்கள். ஆனால் பிரதமர் மோடி, அவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவர். அவர் பிரதமரான பிறகு, மகாகவி பாரதியார், பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் ஆகியவைகளிலிருந்து மேற்கொள்



காட்டி வருவதோடு விளக்கமும் தருவதை வழக்கமாகவே வைத்திருக்கிறார்.

இந்திய ராணுவ வீரர்கள் மத்தியில் பிரதமர் மோடி சமீபத்தில் உரையாற்றினார். அவர்களில் தமிழக வீரர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அந்த உரையில் ராணுவ வீரர்களுக்கு உற்சாக மூட்ட விடுதலைக் கவிஞர் மகாகவி பாரதியாரின் கவிதையை எழுச்சி பொங்கிட எடுத்துரைத்ததோடு - தெளிவான விளக்கத்தையும் தந்தார்!

'மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநிலம் மீது அது போல் பிறிதிலையே!
இன்னறு நீர்க் கங்கை ஆறு எங்கள் ஆறே
இங்கு இதன் மாண்பிற்கு எதிர் எது வேறே?'

என்கிற மகாகவி பாதியாரின் இந்தப் பாடல் வரிகளை உணர்ச்சிப் பிரவாகமாக கொட்டும் குளிர் பனியில் பிரதமர் மோடி ஆவேசத்தின் உச்சத்தில் நின்று முழங்கினார்.

பாட்டு வரிகளுக்கு எளிய விளக்கத்தை பல்வேறு மொழிகளைக் கொண்ட ராணுவ சிப்பாய்களுக்கு புரிந்த ஹிந்தி மொழியில் சொன்னபோது, கரவொலி எழுப்பி ஆரவாரமும் கூளுரையும் மேற்கொண்டனர் ராணுவ வீரர்களும் வீராங்கனைகளும். தமிழன்னை மகிழ்ச்சியில் திளைத்திருப்பாள்.

இன்னொரு ராணுவ நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் மோடி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை மேடையில் உரக்கச் சொல்லி, திறமான விளக்கத்தை கேட்போரைக் கவர்கின்ற வகையில் கூறினார்.

மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு

என்ற குறட்பாவை ராணுவ வீரர்களுக்கு மத்தியில் எடுத்துரைத்து படையின் வலிமை, நான்கு வகை பண்புகளை நயம்பட பிரதமர் மோடி தெரிவித்தபோது - ராணுவத்திலுள்ள முப்படைகளின் வீரர்கள், தளபதிகள் வியந்து நின்றதை இந்திய மக்கள் அனைவரும் கண்டுணர்ந்தனர்! பெருமிதம் கொண்டனர்!

சென்னையில் நேரு விளையாட்டு அரங்கில் கடந்த ஜூலை -28இல் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழாவில் உரையாற்றியபோது

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு'

என்ற குறளை எடுத்துக்கூறி, பொருள் விளக்கம் சொல்லி 188 நாடுகளின் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு மட்டுமல்ல, அதைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த உலகளாவிய ரசிகர்களுக்கும் தமிழையும், குறளையும் அறிமுகப்படுத்தி மகிழ்ந்தார்.

> **இந்திய நாட்டின் பிரதமராக இருந்த எவரும் தமிழ் மொழியின் மீதும், தமிழ் இனத்தின் மீதும் பிரதமர் நரேந்திர மோடியைப் போல அக்கறை காட்டியதில்லை. இதனால் இந்தியாவின் பிற மாநிலங்களில் அவருக்கு வாக்குகள் கிடைக்கப் போவதில்லை. அது தெரிந்தும், தமிழின்பால் அவர் ஈர்க்கப்பட்டிருப்பதன் வெளிப்பாடுதான் அது.**

தமிழனின் விருந்தோம்பல் எப்படிப்பட்டது என்பதை உலக நாடுகளுக்கு தமிழ்ப்புலவனின் திருக்குறள் மூலமாக எடுத்துக்காட்டியது தமிழ் இனத்தைப் பெருமைப்படுத்திய செயல். இதுவரை நமது அரசியல்வாதிகள்தமிழனுக்குத் தமிழின் பெருமையைச் சொல்லி வாக்கு வேட்டையாடினார்கள். பிரதமர் நரேந் திர மோடி அதிலிருந்து மாறுபட்டு, தமிழகத்துக்கு வெளியே தமிழையும், தமிழின் பெருமையையும் கொண்டு செல்கிறார்.

இந்திய நாட்டின் பிரதமராக இருந்த எவரும் தமிழ் மொழியின் மீதும், தமிழ் இனத்தின் மீதும் பிரதமர் நரேந்திர மோடியைப் போல அக்கறை காட்டியதில்லை. இதனால் இந்தியாவின் பிற மாநிலங்களில் அவருக்கு வாக்குகள் கிடைக்கப் போவதில்லை. அது தெரிந்தும், தமிழின்பால் அவர் ஈர்க்கப்பட்டிருப்பதன் வெளிப்பாடுதான் அது.

பிரதமரின் 'மனதின் குரல்' மக்களிடையே எளிதாக இனிதாக சென்று சேர்ந்து கொண்டிருக்கிறது! 92-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் இந்தியாவின் பாரம்பரிய தானிய வகைகள் குறித்து தமிழ்நாட்டு பெண்மணியோடு கருத்துகளை பகிர்ந்து புறநானூறு, தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளவற்றை அவர் மேற்கோள் காட்டிய போது, நமக்கே அது புதிதாக இருந்தது.

'ஒரே இந்தியா சிறந்த இந்தியா' என்ற முழக்கத்தை முன் வைத்து நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி பேசுகின்றபோது கூட இந்தியாவின் பன்முகத்தன்மைதான் நாட்டின் பெருமை என புளகாங்கிதம் அடைகின்ற பிரதமர், தமிழ்மொழி இந்த செழுமிய கலாசாரத்தில் மிகப்பெரும் பங்காற்றியிருக்கிறது என்று பெருமையோடு சுட்டிக் காட்டுகிறார்.

மத்திய அரசு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கிபோது தமிழனின் சங்க நூலான புநானூற்றிலிருந்து கருத்துகள் எடுத்தாளப்படுகின்றன. இந்தியாவின் ஆட்சிமன்ற அவையில் 10 ஆயிரம் ஆண்டுகால தமிழ் இனத்தின் இலக்கியம், பக்தி இலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள் தொடர்ந்து மேற்கோள் காட்டப்படுகின்றன.

இந்திய மாநிலம் ஒவ்வென்றும் தனித்தனித் தீவுகளாக தன்னை கட்டமைத்துக் கொண்டிருப்பது - கடந்த 70 ஆண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்தவர்கள் செய்த குற்றம்! இந்த அபாயகரமான நிலைமையை இனிமேலும் அனுமதித்தால் - இந்தியா பிரிவினைவாதிகளால் துண்டாடப்பட்டு விடும். எனவே மாநிலங்களுக்கிடையே கலாசார மாற்றம் அவசியமானது! அவசரமானது! காலத்தின் தேவையானது!

பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க இந்திய மக்கள் பெரும்பாலும் தங்கள் இல்லங்களில் தேசியகொடியேற்றி சுதந்தரதின அமுத பெருவிழாவை மகிழ்ச்சியாகக் கொண்டாடினர். பிரிவினைவாதம் பேசும் தமிழகமே 80 சதவீத இல்லங்களில் தேசியகொடியேற்றி இந்தியா என்பது ஒரே நாடுதான் நாங்கள் அமைத்திருப்பது ஒரேகொடியின் கீழ்அமைந்துள்ள இந்தியபேரரசுதான் அது எங்கள் மோடி அரசுதான் என நிரூபித்துள்ளார்கள்.

22 இந்திய மொழிகளில் தமிழும் இருப்பதை ஏட்டளவிலிருந்து நாட்டு மக்களிடம் கொண்டு சேர்த்திருப்பது மட்டுமல்லாமல், தமிழுக்கு உலக அரங்கில் ஏற்றம் தந்து புகழ்உச்சியில் மகுடம் சூட்டி மகிழ்பவர் நம் பிரதமர் மோடி!

தமிழுக்குப் பெருமைசேர்த்த அப்பெருமகனாரின் பிறந்த தினம் நேற்று முன்தினம் செப்டம்பர் 17. அவர் பல்லாண்டு வாழ்க என நாம் வாழ்த்தும் போது தமிழன்னையும் 'தமிழ் வளர்க் கும் பெரியார் மோடி' வாழ்க என வாழ்த்துவாள்.

(தினமணி)

(கட்டுரையாளர்: துணைத்தலைவர், தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சி.)

# இலங்கை தாமரை கோபுரம்: மக்கள் பார்வையிட அனுமதி!



## சிறப்புகள், கட்டணம், நேரம் உள்ளிட்ட விவரங்கள்

தெற்காசியாவின் உயரமான கோபுரம் இலங்கையில் கடந்த 15ம் திகதி பொதுமக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது.

தெற்காசியாவின் உயரமான கோபுரம் என்ற பெருமையை கொண்ட தாமரை கோபுரம் (லோட்டஸ் டவர்) முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால், 2019ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட கோபுரத்தை மக்கள் பார்வையிடுவதற்கு, இப்போது சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

கொழும்பு மத்திய பகுதியில் தாமரை கோபுர நிர்மாணப் பணிகள் 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டிருந்தன. சுமார் 7 வருடங்களில் தெற்காசியாவிலேயே உயரமான கோபுரமாக இது கட்டி முடிக்கப்பட்டது.

இந்த தாமரை கோபுர நிர்மாணத்திற்காக 113 மில்லியன் அமெரிக்க டாலருக்கு நிகரான நிதி செலவிடப்பட்டுள்ளது.

சீனா மூலம் இதற்காக 88.65 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி கிடைக்கப்பெற்றதுடன், எஞ்சிய தொகையை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழு செலவிட்டுள்ளது.

தாமரை கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையினால், இலங்கையின் தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவைகள் இனிவரும் காலங்களில் டிஜிட்டல் மயப்படுத்தப்படுகின்றன.



### எப்போது பார்வையிடலாம்? கட்டணம் எவ்வளவு?

இதேவேளை, இந்த தாமரை கோபுரத்தை பிற்பகல் 2 மணி முதல் இரவு 10 மணி வரை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

10 வயதுக்கு குறைவான சிறார்களுக்கு 200 ரூபா நுழைவு சீட்டும், ஏனையோருக்கு 500 ரூபாய் மற்றும் 2000 ரூபாய் நுழைவு சீட்டுக்களும் விநியோகிக்கப்படுகின்றன.

அதேபோன்று, வெளிநாட்டவர்களுக்கு இந்த கோபுரத்திற்கு உள்ளே சென்று பார்வையிடுவதற்கு 20 டாலர் அறவிடப்படவுள்ளதாக கொழும்பு தாமரை கோபுரம் தனியார் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த கோபுரத்தின் மேல் மாடிக்கு சென்று பார்வையிடும் போது, கொழும்பு மாத்திரமன்றி, இலங்கையின் பல பகுதிகளை பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

### தாமரை வடிவம் ஏன்?

தெற்காசியாவில் உயரமான இந்த கோபுரத்துக்கு தாமரை வடிவம் தரப்பட்டதற்கான காரணம் இதுவரை தெளிவில்லாது காணப்படுகின்றது என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சின்னமும், தாமரை வடிவத்தை கொண்டமைந்தமை கடந்த காலங்களில் பாரிய பேசுபொருளாக அமைந்தது.

தமது கட்சியின் அடையாளத்தை பிரதிபலிக்கும் வகையில் இந்த கோபுரம் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும், அரசியல் ஆய்வாளர்கள் அதனை நிராகரிக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2015ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தோல்வி அடைந்ததை அடுத்தே, சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி உருவாக்கப்பட்டதாகவும், ஆனால் தாமரை கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் 2012ம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்டதாகவும் மூத்த பத்திரிகையாளர் வி. தனபாலசிங்கம் தெரிவித்தார்.

அதனால், இந்த தாமரை அடையாளத்திற்கும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சின்னத்திற்கும் இடையில் தொடர்பு இருப்பதாக கூற முடியாது என்றும் அவர் கூறுகின்றார்.


ராஜபக்ஷ குடும்பத்திற்கும், சீனாவிற்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்புகள் காணப்பட்ட நிலையிலேயே, தாமரை கோபுரத்திற்கு தாமரை வடிவம் அமைக்கப்பட்டமை தொடர்பில் மக்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வந்தனர்.

ராஜபக்ஷ குடும்பத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை, ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமானம் நிலையம், தாமரை கோபுரம் உள்ளிட்ட இலங்கையின் மிக பிரமாண்டமான திட்டங்களுக்கு சீனா உதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## தெற்காசியாவின் உயரமான கோபுரத்தின் சிறப்பம்சங்கள்

- 356 மீட்டர் உயரமான இந்த கோபுரம், தெற்காசியாவிலேயே உயரமான கோபுரமாக கருதப்படுவதுடன், உலகிலேயே 19ஆவது உயரமான கோபுரமாகவும் திகழ்கின்றது.
- கொழும்பு - டி.ஆர். விஜேவர்தன மாவத்தையிலுள்ள பேரவாவியை அண்மித்து அமைந்துள்ள இந்த கோபுரத்தின் அடிப்பரப்பு 30,600 சதுரஅடி.
- சுமார் 200 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகளும் இந்த இடத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.
- இந்த கோபுரத்தின் ஊடாக இலங்கை தொலைக்காட்சி மற்றும் வானொலிகள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் ஒளி, ஒலிபரப்பு செய்வதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
- இந்த கோபுரத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது மாடிகள் தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.
- தாமரை கோபுரத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது மாடிகள் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான மண்டபங்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்த கோபுரத்தின் 6ஆவது மாடியே மிகவும் சிறப்பு இடத்தைப் பிடிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
- 6ஆவது மாடியில் உள்ள உணவகம் சுழலும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், உணவு உட்கொண்ட வண்ணமே கொழும்பு நகர் முழுவதையும் கண்டுகளிக்கும் வாய்ப்பும் இதனால் மக்களுக்கு கிடைக்கிறது.
- 7ஆவது மாடியானது, கோபுரத்தின் உயரமான இடத்திற்கு சென்று கொழும்பு நகரின் அழகை கண்டுகளிக்கும் வகையில் அமைந்துள்ளது.
- இந்த கோபுரத்தில் 8 மின்தூக்கிகள் உண்டு. இங்கே நொடிக்கு 7 மீட்டர் உயரும் இலங்கையின் முதலாவது வேகமான மின்தூக்கி பொறுத்தப்பட்டுள்ளமையும் விசேடஅம்சமாக கருதப்படுகிறது.










# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1)
2)
3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3 4 3 = 15 இங்கு * ⌗ ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

01) **பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அ்.றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அ்.றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

04) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

05) **பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

### கல்வி tv CHANNEL-1

**18.09.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**18.09.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வடக்கு - கிழக்கு நில தொடர்ச்சியை துண்டாட இந்தியா அனுமதிக்காது!

## திருக்கோணேஸ்வர ஆக்கிரமிப்பு தொடர்பில் இரா. சம்பந்தன் ஜனாதிபதி ரணிலுக்கு கடிதம்

கொழும்பு, செப். 19

”இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இங்குள்ள மாவட்டங்களைக் கூறு போட்டு இன நிலத்தொடர்ச்சியை துண்டிக்கும் நடவடிக்கையை இந்தியா ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டாது.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருக்கோணேஸ்வரம் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

திருக்கோணேஸ்வரத்துக்குள் நுழைவதற்கான பிரெட்ரிக் கோட்டையின் ஒரு பகுதியில் தங்கியிருந்த இராணுவத்தினர் அங்கு புத்தர் சிலையொன்றை நிர்மாணித்தனர். திருக்கோணேஸ்வரத்தையும் புத்த பெருமானையும் வழிபட விரும்பிய மக்கள் இப்பிரதான நுழைவாயிலின் வழியாக கோட்டையினுள் சென்று வழிபாடு செய்தனர். கோட்டைக்குள் நுழைந்து புத்தபெருமானையும் கோணேஸ்வரரையும் வழிபடுவதற்கு வேறு வழிகள் ஏதும் இருக்கவில்லை.

அண்மைக் காலங்களில் புத்தபெருமானின் சிலைக்கும் அங்கிருந்து திருக்கோணேஸ்வரத்துக்கும் ஒரு புதிய பாதை திறக்கப்பட வேண்டுமென்று முன்மொழிவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தேவையற்றது என்பதோடு, ஆள்கள் இவ் வழியில் அத்துமீறுவதற்கும் அக் காணியில் தங்கியிருப்பதற்கும் வழிவகுக்கும்.

அது திருக்கோணேஸ்வரம் கோயில் மற்றும் புத்த பெருமானின் சிலை ஆகியவற்றின் புனிதத்தன்மையும் பக்தி உணர்வும் குறைவடைவடைவதற்கே வழிவகுக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரினால் இரத்தினபுரியிலிருந்து சில வர்த்தகர்கள் கொண்டுவரப்பட்டு, கோணேஸ்வரத்துக்கான பாதையில் அமர்த்தப்பட்டனர். அது இப்பகுதியின் புனிதத்தன்மையும் பக்தி உணர்வும் குறைவடைவடைவதற்குக் காரணமாகியது.

புத்தபெருமான் சிலை உள்ள பகுதியில் திருக்கோணேஸ்வரம் வரையிலான இப் புதிய பாதை திறப்பு நிறுத்தப்பட வேண்டுமென நான் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன். இல்லையேல் இது தீங்கு இழைக்கப்படுவதற்கே வழிவகுக்கும்.

ஒரு சர்வதேச உடன்படிக்கையான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்கீழ், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பெரும் நிலப்பரப்பு, திருகோணமலை மாவட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வட மத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுர மாவட்டத்திலிருந்து ஒரு பெரும் நிலப்பரப்பு பதிலீடு செய்யப்படவுள்ளது என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதன்மையான நோக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இனத்துவ நிலத் தொடர்ச்சியைத் துண்டிப்பதாகும். பொலநறுவை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை கிழக்கு மாகாணத்துக்குள் கொண்டுவரும் அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை பொலநறுவை மாவட்டத்தோடு இணைக்கும் அதே போன்றதொரு முன்மொழிவு திருகோணமலையின் தெற்குப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது, பாரதூரமான எதிர்வலைகளையும் உலகில் இரண்டாவது மிகச் சிறந்த துறைமுகமாக கருதப்படும் திருகோணமலைத் துறைமுக்துக்குப் பாரதூரமான பின்விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தோடு, வடக்கு மற்றும் தெற்கின் கடல்சார் எல்லைகள் ஊறுபடுவதற்கும் வழிவகுக்கும்.

இப் பகுதிகளில் வாழுகின்ற தமிழ்ப் பேசும் மக்களோ அல்லது எமது அயல் நாடோ அல்லது மிக அருகில் உள்ள நாடுகளோ இந்த நடவடிக்கையை அங்கீகரிக்கப்போவதில்லை.

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கிலும் தெற்கிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையில் இனத்துவ நிலத் தொடர்ச்சியை இல்லாது செய்வதே இதன் முழு நோக்கமாகும். கிழக்கு மாகாணத்தை ஒரு சிங்கள பெரும்பான்மை மாகாணமாக மாற்றியமைப்பதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான இனத்துவ நிலத் தொடர்ச்சியை துண்டிப்பதும் பேரினவாத சிங்கள அரசுகளின் நீண்டகால குறிக்கோளாக இருந்து வருகின்றது.

இம் முயற்சிகள் அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையினராகக் கொண்டதாகும் என்பதோடு, எந்தவொரு மாவட்டமும் சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக இல்லை என்பதுவுமே யதார்த்தம்.

இது, வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக் கொண்ட தமிழர்கள் தமிழ்பேசும் மக்கள் ஓர் ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கை என்ற வரையறைக்குள் உள்ளக சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு மக்கள் குழுவினர் ஆவர் என்ற நிலைப்பாட்டுக்கு அமைவானதாகும். இதனையே தமிழர்கள் - தமிழ்பேசும் மக்கள் ஓர் அரசியல் தீர்வாகக் கோரி நிற்கின்றனர். இந்த நிலைப்பாடு 1956 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து ஜனநாயகத் தீர்ப்புகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரச்னையை நீடிக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைவிட, இந்த அடிப்படையில் இப்பிரச்னை தீர்த்து வைக்கப்பட வேண்டுமென நான் பலமாக வலியுறுத்துகிறேன் - என்றுள்ளது.

(ஐ)

# மறைந்த உறுப்பினர் புவனேஸ்வரிக்கு கல்முனை மாநகர சபையில் அஞ்சலி

நிந்தவூர், செப். 18

காலஞ்சென்ற கல்முனை மாநகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான புவனேஸ்வரி விநாயகமூர்த்தியின் பூதவுடல் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாநகர சபைக்கு கொண்டு வரப்பட்டு, இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் சபா மண்டபத்தில் மாநகர முதல்வர் ஏ. எம். றகீப் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இறுதி அஞ்சலியுடன் இரங்கல் உரைகளும் நிகழ்த்தப்பட்டன. அத்துடன், ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் விசேட இரங்கல் செய்தியும் அவரின் பிரதிநிதியால் வாசிக்கப்பட்டு, குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வுக்காக பாண்டிருப்பு பிரதேசத்திலுள்ள அமரர் புவனேஸ்வரியின் வீட்டில் இருந்து அவருடைய பூதவுடல் தாங்கிய ஊர்தி, கல்முனை - மட்டக்களப்பு நெடுஞ்சாலை ஊடாக மாநகர சபை வரை ஊர்வலமாக கொண்டு வரப்பட்டிருந்தது.

இதன்போது மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் அரசியல், சிவில் சமூக பிரதிநிதிகள் பலரும் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி உள்ளிட்ட அதிகாரிகளும் இறுதி மரியாதை செலுத்தினர்.

மாநகர முதல்வர் ஏ.எம். றகீப், மாநகர சபை உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், ஏ.ஆர்.அமீர், கதிரமலை செல்வராசா, ஆரிக்கா காரியப்பர், சுஹைல் அஸீஸ், ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ்.ஏ.றஸ்ஸாக், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் அப்துல் மனாப் ஆகியோர் இரங்கல் உரைகளை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் அமரர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தியின் புதல்வர் உட்பட குடும்பத்தினர், உறவினர்கள், ஆதரவாளர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை மாநகர சபையில் கடந்த 2018ஆம் ஆண்டு தொடக்கம் உறுப்பினராக பதவி வகித்து வந்த புவனேஸ்வரி விநாயகமூர்த்தி, திடீர் சுகயீனம் காரணமாக கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ -6)

# இரசாயன திரவம் மூலம் காய்களை பழமாக்கிய இருவருக்கு அபராதம்!

பொத்துவில், செப். 19

வாழைக் காய்களுக்கு இரசாயன திரவம் தெளித்து பழுக்க வைத்த இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது நீதிமன்று.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துடன் பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து நடத்திய சோதனையிலேயே கைது செய்யப்பட்ட இவர்கள் இருவரும் பொத்துவில் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இருவரும், குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் இருவருக்கும் தலா 10,000 ரூபாய் தண்டப்பணம் நீதிவான் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

அண்மைக்காலமாக பொத்துவில் பிரதேசத்தில் பழங்களை பழுக்க வைப்பதற்காக இரசாயன திரவம் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் இந்தப் பழங்களை உண்பதால் பக்க விளைவுகளான வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன என்றும் பொது மக்கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்தனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டே இந்த திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(ஐ)

# ஹெரோயினுடன் ஒருவர் அக்கரைப்பற்றில் கைது

அக்கரைப்பற்று, செப். 19

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டவரை விளக்க மறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவின் அட்டாளைச்சேனையில் 585 கிராம் ஹெரோயினுடன் ஒருவரை பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.ஏ.மஜீத் தலைமையிலான குழுவினர் கைது செய்தனர்.

கைதானவரை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேக நபரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஐ)



## பாடசாலை பேருந்து விபத்து; 19 சிறார் உட்பட 21 பேர் பலி!

### தென்னாபிரிக்காவில் சோகம்

கேப்டவுன், செப். 19

தென்னாபிரிக்காவில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மற்றும் லொறி மோதி நேற்று முன்தினம் இடம்பெற்ற கோர விபத்தில் 12 வயதுக் குட்பட்ட 19 சிறுவர்கள் உட்பட 21 பேர் உயிரி ழந்தனர்.

தென்னாபிரிக்காவின் கிழக்கு பகுதியில் அமைந் துள்ள குவாசுலு - நடால் மாகாணத்தின் பொங் கோலா நகரில் தனியார் பாடசாலை மாணவர்களை பாடசாலை முடிந்து ஏற்றிச் சென்ற பேருந்தே விபத் தில் சிக்கியது.

இந்தப் பேருந்தில் 5 முதல் 12 வயதுக்கு உட்பட்ட 19 சிறுவர்கள், ஓட்டுநர் மற்றும் உதவியாளர் என மொத்தம் 21 பேர் இருந்தனர்.

பொங்கோலா நகரில் உள்ள வீதியில் பேருந்து சென்று கொண்டிருந்த போது எதிர் திசையில் அதி வேகத்தில் வந்த லொறி ஒன்று பாடசாலை பேருந் துடன் நேருக்கு நேர் மோதியது. இதில் 21 பேரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்த அதிர்ச்சிகரமான விபத்துக்கான காரணம் குறித்து துரித விசாரணை மேற்கொள்ளப்படும் என்று மாகாண அரசாங்கம் உறுதியளித்துள்ளது. (ஐ)



### மகாராணியின் இறுதி சடங்கு

## பாதுகாப்புக்கு மாத்திரம் 271 கோடி ரூபாய் செலவு

லண்டன், செப். 19

மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதி நிகழ் வின் பாதுகாப்புக்காக நம் நாட்டு மதிப்பில் சுமார் 271 கோடி ரூபாய் தொகை செலவிடப்படவுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 8ஆம் திகதி ஸ்கொட்லாந்தின் பால்மோரல் அரண்மனையில் இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிச பெத் (96) உயிரிழந்தார். அவரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் இன்று நடைபெறுகிறது.

இந்த நிலையில். பிரிட்டனின் வரலாற்றில், இது வரை இல்லாத வகையில், ராணியின் இறுதி நிகழ்வுக் காக சுமார் 271 கோடி ரூபாய் தொகை செலவிடப்படு கின்றன என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரிட்டனின் வரலாற்றில், பாதுகாப்புக்காக இவ் வளவு தொகை செலவிடப்பட இருப்பது இதுவே முதன்முறை என்று கூறப்படுகிறது. இதற்கு முன்னர் சார்ள்ஸ் - டயானாவின் மூத்த மகனான வில்லியமின் திருமணத்தின்போது அதிகப்பயான தொகை பாது காப்புக்காக செலவிடப்பட்டது.

உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் ராணியின் இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதால் பிரிட்டிஷின் எம். ஐ. 5 ரூ எம். ஐ. 6 புலனாய்வு துறையினர், லண் டன் பொலிஸார் மற்றும் இரகசிய அதிகாரிகளும் இணைந்து பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பாதுகாப்பு குறித்து பிரிட்டன் அரச குடும்ப அதிகாரி ஒருவர் கூறும்போது, “பிரிட்டன் மேற் கொள்ளும் மிகப்பெரிய பாதுகாப்பு நடவடிக்கை இது. இளவரசர் வில்லியமின் திருமணத்துக்கு மிகப் பெரிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடந்தன. ஆனால், இது மிகப் பெரியது. அதனுடன் இதனை ஒப்பிட முடியாது” என்றார். (ஐ)

# மகாராணியின் இறுதிசடங்கு இன்று; 2000 உலகத் தலைவர்கள் பங்கேற்பர்!

லண்டன், செப். 19

பிரிட்டன் மகாராணி இரண் டாம் எலிசபெத்தின் இறுதிச் சடங்கு இன்று நடைபெறுகிறது. இந்த இறுதிநிகழ்வில் உலக நாடுகளின் 2000 தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இதேவேளை, இன்றைய தினத்தில் லண்டன் மாநகரில் அதிக மக்கள் கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதையொட்டி விசேட பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

பிரிட்டன் மகாராணி இரண் டாம் எலிசபெத் கடந்த 8ஆம் திகதி காலமானார். அவரின் உடல் அடங்கிய சவப்பெட்டி கடந்த 14ஆம் திகதி முதல் லண்டனில் பாராளுமன்ற வளாகத்தில் உள்ள வெஸ்ட் மின்ஸ்டர் மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக் கப்பட்டுள்ளது.

பல மணி நேரம் வரிசையில் காத்து இருந்து மக்கள் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். ராணி எலிசபெத்தின் இறுதி சடங்கு இன்று திங்கட்கிழமை நடக்கிறது. உள்ளூர் நேரப்படி இன்று காலை 6.30 மணி வரை அஞ்சலி செலுத்த மக்கள் அனுமதிக்கப்படுவர்.

அதன்பின் இறுதிச்சடங்கு நிகழ்வுகள் தொடங்கும். ராணி எலிசபெத் உடல் வெஸ்ட்மின்ஸ் டர் மண்டபத்தில் இருந்து



ஊர்வலமாக வெஸ்ட்மின்ஸ்டர் அபேவுக்கு எடுத்து செல்லப்படு கிறது.

அங்கு ராணியின் கணவர் இள வரசர் பிலிப் உடல் அடக்கம் செய் யப்பட்டுள்ள இடம் அருகே எலிச பெத் உடல் நல்லடக்கம் செய்யப் படுகிறது. ராணி எலிசபெத் உடல் ஊர்வலமாக எடுத்து செல்லப்ப டும் போது வழி நெடுகிலும் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்து கிறார்கள். இதில் 7.5 லட்சம் பேர் திரளுவார்கள் என்று எதிர்பார்க் கப்படுகிறது.

இதையடுத்து லண்டன் நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ராணி எலிசபெத்தின் இறுதிச்சடங்கு இங்கிலாந்து முழுவதும் 100இற் கும் மேற்பட்ட திரையரங்குகளில் நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது. அதேபோல் பூங்கா, சதுக்கம் மற் றும் தேவாலயங்களில் பெரிய திரைகள் அமைக்கப்பட்டு ஒளி பரப்பப்படுகிறது. தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் நேரடி ஒளிபரப்பு செய்கின்றன.

ராணி எலிசபெத் இறுதி சடங்கில் 2 ஆயிரம் உலக தலைவர்கள் பங்கேற்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இரசாயன, அணு ஆயுதங்களை ரஷ்யா பயன்படுத்தக்கூடாது!

### அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்து

வாஷிங்டன், செப். 19

உக்ரைனில் பெரும் பின்னடைவுகளை ரஷ்யா சந்தித்து வரும் நிலையில் அங்கு அணு அல்லது இர சாயன ஆயுதங்களை பயன்படுத்தக்கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இவ்வாறு கூறினார்.

இந்த வாரம் பல அதிரடித் தாக்குதல்களை நடத்திய உக்ரைன் இராணுவம் நாட்டின் வட, கிழக்கில் ஆக்கிரமிக்கப்பட்ட பல பகுதிகளில் இருந்து ரஷ்யப் படைகளை விரட்டித்தது. குறிப்பாக கார்கிவ் மாகாணத்தில் இசியம் நகரம் உட்பட பல முக்கிய பகுதிகளை உக்ரைன் படைகள் ரஷ்யாவிடம் இருந்து கடந்த சில நாட்களில் மீட்டுள்ளன.

உக்ரைனில் ரஷ்யா கைப்பற்றிய முக்கிய இடங்களை மீண்டும் உக்ரைன் படைகளிடம் இழந்து வரும் நிலையில் உக்ரைன் அரசாங்கம்மீது ரஷ்ய தேசியவாதிகள் கடும் கோபத்தை வெளிப்படுத்தியுள் ளனர்.

உக்ரைன் போரில் இறுதி வெற்றியை உறுதிசெய்ய உடனடி மாற்றங்களைச் செய்யுமாறு அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இந்நிலையில் தனது துருப்புக்கள் மேலும் அழுத்தத்துக்கு உள்ளானால் ரஷ்யா பலமாக பதிலடி கொடுக்கும் என்று புடின் எச்சரித்துள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே போரில் பின்னடைவுகளை சந்தித்துவரும் ரஷ்யா, உக்ரைனில் அணு அல்லது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடாது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, போரில் ரஷ்யா அணு ஆயுதங்க ளைப் பயன்படுத்தலாம் என்ற மேற்குலக நாடுகளில் எச்சரிக்கைகளை ரஷ்ய அரசாங்க அதிகாரிகள் நிராக ரித்துள்ளனர்.



## கிறிஸ்தவ மதத்தை மட்டுமல்ல சகல மதங்களையும் காப்பேன்

### மன்னர் சார்ள்ஸ் தெரிவிப்பு

லண்டன், செப். 19

“கிறிஸ்துவம் மட்டுமல்ல, அனைத்து மதங்களையும் பாதுகாப்பேன்” - என்று பிரிட்டனின் மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

70 ஆண்டுகளுக்கு மேலாக பிரிட்டனை ஆட்சி செய்த ராணி இரண்டாம் எலிசபெத் மறைவை தொடர்ந்து அவரின் மகனான இளவரசர் சார்ள்ஸ் மன்னராக பதவியேற்றார்.

இந்நிலையில், மதத் தலைவர்களை பக்கிங்ஹாம் அரண்மனையில் சந்தித்த இங்கிலாந்து மன்னர், “கிறிஸ்தவம் மட்டுமல்ல, எல்லா மதங்களையும் பாதுகாப்பேன். அனைத்து மத நம்பிக்கைகளையும் பாதுகாப்பதில் நம்பிக்கை கொண்டுள்ளேன். நான் எப்பொழுதும் பிரிட்டனை சமூகங்களின் சமூகமாகவே நினைத்திருக்கிறேன்.

மதங்கள், கலாசாரங்கள், மரபுகள் மற்றும் நம்பிக்கைகளைப் பாதுகாப்பதன் மூலம் நமது நாட்டின் பன்முகத்தன்மையைப் பாதுகாப்பது நமது கடமையாகும். நமது நாட்டின் பன்முகத்தன்மை நம் நாட்டின் சட்டங்களில் மட்டும் பொறிக்கப்பட வில்லை. எனது சொந்த நம்பிக்கையிலும் உள்ளது. அரசனாக அனைத்து சமூகங்களுக்காகவும் அனைத்து நம்பிக்கைகளையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் நான் உறுதியாக இருக்கிறேன்” என்று கூறினார்.




# மீண்டும் வெளிர் நீல நிற சீருடையில் இந்திய அணி!

மும்பை, செப். 19

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய இருபது - 20 கிரிக்கெட் சீருடை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ழுநெ டீடரந துநசளநல என்ற பெயரில் இந்த சீருடை அறிமுகமாகிறது.

அணித் தலைவர் ரோஹித் சர்மா, ஹார்திக் பாண்ட்யா, சூர்யகுமார் யாதவ், ஹர்மன்ப்ரீத் கவுர், ஷெஃபாலி வர்மா, ரேணுகா சிங் ஆகியோர் புதிய சீருடைய அறிமுகப்படுத்தினர்.

இந்த புதிய சீருடையில் கை பகுதி கருநீல வண்ணத்திலும், உடல் பகுதி வெளிர் நீல வண்ணத்திலும் உள்ளது. கடந்த சில நாட்களாகவே இந்திய அணியின் புதிய சீருடை மீது எதிர்பார்ப்பு இருந்து வந்தது. அந்த வகையில் மீண்டும் பழையபடி வெளிர் நீல வண்ணத்திற்கு திரும்பியுள்ளது இந்திய அணியின் சீருடை. இனி இருபது - 20 கிரிக்கெட் போட்டிகளில் இந்த புதிய சீருடையை அணிந்து கொண்டுதான் இந்திய அணி விளையாடும் என தெரிகிறது.

அவுஸ்திரேலியா தொடர், தென்னாபிரிக்கா தொடர் மற்றும் இருபது - 20 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணி இந்த புதிய சீருடையை அணிந்து விளையாடும் என தெரிகிறது. ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் அணி வீரர்கள் இந்த சீருடையை அணிந்து விளையாடுவார்கள். (ஐ)

# குஜராத் அணியிலிருந்து விலகினார் ஷப்மன் கில்!

குஜராத், செப். 19



கடந்த ஆண்டு இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐபிஎல்) “வளர்ந்து வரும் சிறந்த வீரர்” விருதை வென்ற ஷப்மன் கில் குஜராத் ரைட்டன்ஸ் அணியிலிருந்து வெளியேறியுள்ளார்.

21 வயதான ஷப்மன் கில், கடந்த ஆண்டே தொடங்கப்பட்டு கிண்ணம் வென்ற குஜராத் ரைட்டன்ஸ் அணியின் முக்கிய வீரராக திகழ்ந்தார். கடந்த சீசனில் 132.33 ஸ்ட்ரைக் ரேட்டுடன் குஜராத் அணிக்காக 16 போட்டிகளில் 483 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

இந்நிலையில், குஜராத் அணியில் இருந்து ஷப்மன் கில் வெளியேறியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையில், குஜராத் ரைட்டன்ஸ் தனது ருவிட்டர் பக்கத்தில் ”இது நினைவில் கொள்ள வேண்டிய பயணம். உங்கள் அடுத்த முயற்சிக்கு நாங்கள் நல்வாழ்த்துக்கள்” என்று ஷப்மன் கில்லை குறிப்பிட்டு வாழ்த்தியுள்ளது.

குஜராத் ரைட்டன்ஸஸுடன் இணைந்த முதல்முறையே கிண்ணம் வெல்லும் அளவுக்கு அணியை கொண்டுச் சென்ற கில் அணியில் இருந்து வெளியேறுவது ஏன் என்பதற்கான காரணங்கள் சொல்லப்படவில்லை. மேலும், அடுத்ததாக அவர் எந்த அணியில் இணைய போகிறார் என்ற தகவலும் வெளியாகவில்லை. இதனால் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியின் ரசிகர்கள், தங்கள் அணியில் இணைய வேண்டும் என்று ருவிட்டரில் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

2018இல் ஐ. பி. எல். தொடரில் அறிமுகமான ஷப்மன் கில் இதுவரை 74 போட்டிகளில் விளையாடியுள்ள 32.20 சராசரியுடன் மொத்தம் 1900 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

# ஜடேஜா இல்லாதது இந்தியாவுக்கு இழப்பு

டுபாய், செப். 19



இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 16ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் தொடங்குகிறது. இந்தத் தொடருக்கான 15 பேர் கொண்ட இந்திய அணியில் காயம் காரணமாக சகல துறை வீரர் ரவீந்திர ஜடேஜா இடம் பெறவில்லை. இந்நிலையில் அவர், இடம்பெறாதது இந்திய அணிக்கு பெரிய இழப்பு என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் மஹேல ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர், ஐ. சி. சி. நிகழ்வில் கூறும்போது, “இருபது-20 உலகக் கிண்ண ரவீந்திர ஜடேஜா இல்லாமல் எதிர்கொள்வது சவால் தான். இந்திய அணியில் துடுப்பாட்ட வரிசையில் 5-வது இடத்தில் ஜடேஜா சரியாக பொருந்தியிருந்தார். அவரும், ஹார்திக் பாண்ட்யாவும் துடுப்பாட்ட வரிசையில் முதல் 6 இடங்களில் இருப்பது என்பது இந்திய அணிக்கு அதிக நெகிழ்வு தன்மையை கொடுத்தது.

இந்திய அணிக்கு இது கடினமான ஒன்று, இடது கை பேட்ஸ்மேன் இல்லாதது கவலையாக இருக்கக்கூடும். இதனால் தினேஷ் கார்த்திக்கை தவிர்த்துவிட்டு ரிஷப் பந்த்தை துடுப்பாட்ட வரிசையில் 4 அல்லது 5ஆவது இடத்துக்கு கொண்டுவர யோசிக்கக்கூடும். உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக இந்த விஷயங்களை சரிசெய்ய வேண்டும். ஆனாலும் ஜடேஜா இருந்த நிலைக்கு அவர், இல்லாததது இந்திய அணிக்கு பெரிய இழப்புதான்.

இதேவேளையில் விராட் கோலி மீண்டும் வழக்கமான நிலைமைக்கு திரும்பி இருப்பதை பார்க்க சிறப்பாக உள்ளது. புத்திசாலித்தனமான வீரர்கள் அனைவரும் உலகக் கோப்பையில் சிறந்த தகுதியில் இருக்க வேண்டும், அதுதான் உலகக் கிண்ணத்துக்கும் தகுதியானது. அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடர் சுவாரசியமானதாக இருக்கும்.

என்னை பொறுத்தவரையில் இந்திய அணி விளையாடும் விதம் சிறப்பாக உள்ளது. செயல், திறமை அனைத்தும் உள்ளது. அவர்களுக்கு பேட்டிங், பந்து வீச்சு மற்றும் களத்தில் செயல்படுவதில் சிறிது நம்பிக்கை தேவை. இவை இந்தியா மேம்படுத்த விரும்பக்கூடிய சிறிய விஷயங்களாகும். பந்து வீச்சாளர்கள் விக்கெட்களை வீழ்த்த முடியும், திட்டங்களை செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கை பெற வேண்டும் - என்றார்.

# ராகுலே தொடக்க வீரர் - இந்திய அணி தலைவர்!

புதுடில்லி, செப். 19




உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரராக கே. எல். ராகுல் களமிறங்குவார் என இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை தொடருக்கு முன்னதாக இந்திய அணி அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்கா அணியுடனான தொடர்களில் விளையாடவுள்ளது. இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நேற்று இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இதில், கே.எல்.ராகுல் ஒரு சிறந்த வீரர். அவர் தொடக்க வீரராக களமிறங்குவாரா என்பதில் எந்த ஒரு சந்தேகமும் வேண்டாம். நாங்கள் அந்த விஷயத்தில் தெளிவாக உள்ளோம். தொடக்க ஆட்டக்காரர் என்ற விஷயத்தில் கே. எல். ராகுலுக்குதான் முன்னுரிமை. அவர் உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காராக களமிறங்குவார். அவர் இந்திய அணிக்கு மிகவும் முக்கியமானவர். தொடக்க ஆட்டக்காரராக களமிறங்க எங்களிடம் வீரர்கள் உள்ளனர். நான் தொடக்க வீரராக விளையாடுவேன்.

விராட் கோலி இந்திய அணிக்கான மூன்றாவது தெரிவாவார். அவரும் சில போட்டிகளில் அணிக்காக தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கியுள்ளார். நடந்து முடிந்த ஆசியக் கோப்பையில் விராட் கோலி தொடக்க வீரராக களமிறங்கி அதிரடியாக சதம் அடித்திருந்தார். உலகக் கோப்பையில் இந்திய அணிக்காக கே. எல். ராகுல் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்குவார். அதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை.” என்றார்.

# ஹெரோயினுடன் 9 பேர் கைதாகினர்!

கொழும்பு, செப். 19

நாடளாவிய ரீதியில் பல் வேறு பிரதேசங்களில் நேற்றுக் காலை வரை நடத்தப்பட்ட போதைப் பொருள் சுற்றி வளைப்புகளில் 44 கிராம் ஹெரோய்னுடன் 9 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அளுபோமுல்ல பொலிஸ் பிரிவில் 5 கிராம் ஹெரோயி னுடன் ஒருவர் கைதுசெய்யப் பட்டார். அவரிடம் மேற் கொண்ட விசாரணைகளையடுத்து பெண்ணொருவர் 6 கிராம் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டார்.

இதேபோன்று, கிரிபேரிய பிரதேசத்தை சேர்ந்த 28 மற் றும் 36 வயதுகளை உடைய இருவர் கைது செய்யப்பட் டனர்.

இவை தவிர, கோணஹேன பொலிஸ் பிரிவில் 22 கிராம் ஹெரோயினுடன் 34 வயது நபரும், கொழும்பு பேலியா கொடை பொலிஸ் பிரிவில் 11 கிராம் ஹெரோய்னுடன் இருவரும், மாலபே பொலிஸ் பிரிவில் 6 கிராம் ஹெரோயி னுடன் ஒருவரும், கொழும்பு கல்கிசை பொலிஸ் பிரிவில் 5 கிராம் ஹெரோயினுடன் ஒரு வரும் கைதாகினர். (ஐ)

# வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு அரசாங்கத்தின் புதிய அறிவுறுத்தல்!

கொழும்பு, செப். 19

**போலந்து, ருமேனியா, இஸ்ரேல், தென் கொரியா, ஜப்பான், மலேசியா மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி, நிதி மோசடி செய்யும் நபர்களிடம் அகப்பட வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

நாட்டில் தற்போது ஏற் பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாக வெளி நாட்டு வேலைவாய்ப்புக்காக செல்ல பெருமளவானோர் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இந்த நிலையில் வெளி நாட்டு வேலைவாய்ப்பு தொடர்பில் சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளங்கள் ஊடாக நிதி மோசடியில் ஈடு படுபவர்கள் தொடர்பான



முறைப்பாடுகள் நாளாந்தம் அதிகரித்துள்ளன.

இதனால், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக கடவுச்சீட்டு அல்லது பணத்தை வழங்க முன்னர் அதனை பெற்றுக்கொள்ளும் நிறுவனம் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகத் தில் பதிவு செய்யப்பட்டுள் ளதா? என அதன் அனுமதிப் பத்திரத்தை சரிபார்த்து செயற்படுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார அறி வுறுத்தியுள்ளார். (ஐ)

# அமைச்சர் கெஹலியவின் வீட்டுக்கு தீ வைத்தவர் கைது!

கொழும்பு, செப். 19

கடந்த மே மாதம் 9ஆம் திகதி, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் வீட்டுக்கு தீ வைத்தார் என்ற குற்றச்சாட் டில் ஒருவர் கண்டியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

திம்புள - பத்தனை இராவ ணாகொட பிரதேசத்தை சேர்ந்த 30 வயது நபரே இவ் வாறு கைதுசெய்யப்பட்டுள் ளார்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி கொழும்பு காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து ஏற்பட்ட வன்முறையை அடுத்து, பாரா ளுமன்ற உறுப்பினர்கள் பல ரின் வீடுகள், சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டன.

இதன்போது அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு சொந்தமான கண்டியிலுள்ள வீடும் தீக்கிரையாக்கப்பட் டது. இந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்ச்சியாக கைதுசெய்யப் பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (கே)

# ஜப்பானின் எம். பி. இலங்கை வந்தார்

கொழும்பு, செப். 19

ஜப்பானின் முன்னாள் பிரதி அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரு மான மட் சுஷிதா ஷிம்பே இலங்கை வந்துள்ளார். இவர் எதிர்வரும் 23ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்.

ஜப்பான் - இலங்கை பாரா ளுமன்ற நட்புறவு மன்றத்தின் நிறைவேற்று உறுப்பினரான இவர், மூன்றாவது தடவை யாக இலங்கை வந்துள்ளார்.

இவர் ஜப்பானின் வெளி நாட்டு உதவி நிறுவனமான 'ஒடா' நிதியத்தின் தலைவரா கவும் செயல்பட்டுவருகிறார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து ஜப்பானிய அரசாங்கத்துக்குத் தெரியப்ப டுத்துதல், உட்கட்டமைப்பு தொடர்பான குறைபாடுகள் மற்றும் தேவையான புதிய வழிமுறைகள், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை மீண்டும் வலுப்ப டுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இவரின் பயணம் நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# அரசியல்வாதியிடம் பறிக்கப்பட்ட துப்பாக்கி மீட்பு; சந்தேகநபர் கைது!

கண்டி, செப். 19

நாவலப்பிட்டி நகரசபைத் தலைவர் அமல் பிரியங்கர மற் றும் அவரின் சாரதியை தாக்கி துப்பாக்கியை அபகரித்துச் சென்ற முச்சக்கர வண்டி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வசிக்கும் தெற்கு தலங்கமையில் வீடொன்றில் துப்பாக்கியை மறைத்து வைத்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம், நகர சபைத் தலைவர் பயணித்த வாகனத்தை மறித்து சேதப் படுத்தப்பட்டது. இதன்போது நகர சபை தலைவரிடமிருந்த 5 இலட்சம் ரூபாய் பணமும் துப்பாக்கியும் பறித்துச் செல லப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசார ணையில் ஒருவர் கைது செய் யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் துப்பாக்கி மீட்கப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவ டிக்கைகளை எடுத்து வருகின் றனர். (ஐ)

# கணவன் - மனைவி தகராறில் தலையிட்ட மாமனார் கொலை!

கொழும்பு, செப். 19

தனக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் தலையிட்ட மாமனாரை (மனைவியின் தந்தை) தாக்கி கொன்றுவிட்டு மருமகன் தப்பி சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தறை மாவட்டம் - அக்குரஸ்ஸ இம்புல்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் அதே பிரதேசத்தை சேர்ந்த 66 வயது நபரே உயிரிழந்தார் என்றும், கோடரியால் தாக்கப்பட்டே கொலை செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரி வித்தனர்.

கொலையை செய்தவர் தப்பி சென்றுள்ளார் என்றும் அவரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, செப். 19

கட்டுநாயக்கா பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப் பில் துப்பாக்கி மற்றும் 20 தோட்டாக்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடையை சேர்ந்த 52 வயது நபரே இவ் வாறு கைதுசெய்யப்பட்டுள் ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை யடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட் டுள்ளார். (கே)

# ரஷ்யாவின் விமானம் தடுக்கப்பட்டது தவறே!

## மன்னிப்பு கேட்டார் அமைச்சர் பந்துல

கொழும்பு, செப். 19

ரஷ்யாவின் ஏரோபுளோட் விமானம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டமை பெருந்தவறு. இது மீண்டும் நடக்காது என்று அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர் என்று போக்குவரத்து, பெருந்தெருக் கள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த் தன தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஊடகமொன்றுக்கு நேற்று முன்தினம் அளித்த செவ்வி ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

"அது ஒரு பெருந்தவறு, அதற்காக நாங்கள் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம். இந்த சம்பவம் முற்றாகத் தீர்க்கப்பட் டுள்ளது. இலங்கையில் மீண் டும் ஒருபோதும் நடக்காது என்று ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் ஆகிய தரப்புகள் உத்தரவாதம் அளிக்



கின்றன.

இலங்கையில் எந்த விமா னத்தையும் தடுத்து வைக்க நாங்கள் விரும்பவில்லை" என் றும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஜூன் 2 ஆம் திகதி இலங்கையில் ரஷ்யாவின் ஏரோபுளோட் நிறுவனத் துக்கு சொந்தமான விமானம் வழக்கு ஒன்றையடுத்து தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# அஸர்பைஜானில் 4 இலங்கையர் கைது!

பக்கூ, செப். 19

அஸர்பைஜான் நாட்டில் நான்கு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்குள்ள ஹொராடிஸ் எல் லைப் பகுதியில் அஸர்பை ஜான் அதிகாரிகளால் அவர் கள் கைது செய்யப்பட்டனர்.

டோஹா மற்றும் டுபாயில் இருந்து சென்று அங்கு சட்ட விரோதமாக தங்கியிருந்த நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித் தின்றன.

அவர்கள் அங்கிருந்து துருக்கிக்கும் பின்னர் ஐரோப் பிய நாடுகளுக்கும் செல்லும் திட்டத்தில் இருந்தனரெனத் தெரிவிக்கப்பட்டது.

## சமஷ்டி அதிகார...

மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன் பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய குழுக் கூட்டத்தில், எமது மக்களை பாதிக்கும் பல விடயங்கள் தீர்க்கமாக கலந்து ஆலோசிக்கப்பட்டன. விசேடமாக நிலங்கள் அபகரிப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் மகாவலி, தொல்லியல் திணைக்களம், வனவிலங்கு பாதுகாப்பு, வனப் பாதுகாப்பு என்று வெவ்வேறு சட்டங்களின் அடிப்படையிலும், வேறு வித மாகவும் நிலங்களுக்கு ஏற்பட இருக்கின்ற ஆபத்துக்களை ஆராய்ந்தோம்.

திருகோணமலையில் தற்போது ஏற்பட்டுள்ள சவால் குறித்து பேசினோம். குறிப்பாக திருக்கோணேஸ்வரத்துக்கு சொந்தமான மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து ஆராயப்பட்டது. இது தொடர்பாக கட்சியால் சில குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த விடயங்களை உடனடியாக ஆராய்ந்து அடுத்த மத்திய, செயல்குழு கூட்டங்களுக்கு முன்னதாக அனைவருக்கும் அனுப்பி வைக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளையில், திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் வாழ்விடங்களுக்கு ஏற்பட்டுள்ள மிக மோசமான பாதிப்புக்கள் குறித்து அந்த மாவட்டத்தின் மாவட்ட மட்ட உறுப்பினர்கள் கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துக்களை பகிர்ந்து சென்றனர்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக கட்சி தலைவர், சிரேஷ்ட உப தலைவர், கட்சி செயலாளர் ஆகியோருடன் நானும் சென்று எங்களுடைய பெருந்தலைவர், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இரா. சம்பந்தனை சந்தித்து இவற்றை கையாள்வது குறித்த உபாயங்கள் தொடர்பாகவும் பேசுவதாக முடிவு எடுத்துள்ளோம்.

அத்துடன், கட்சி மாநாட்டுக்கு முன்பாக எமது கட்சி கிளைகள் புனரமைத்தலில் உள்ள முன்னேற்றங்கள் குறித்து மாவட்டம் மாவட்டமாக ஆராய்ந்தோம். கொரோனா தொற்று அதன்பின் எரிபொருள் பிரச்னை காரணமாக நலிவடைந்து இந்த செயல்பாடுகள் தற்போது ஓரளவுக்கு முன்னேற்றமடைந்துள்ளன. ஒக்ரோபர் மாத இறுதிக்கு முன்னதாக அனைத்து மாவட்ட கிளைகளையும் புனரமைத்து அதனைத் தொடர்ந்து கட்சி மாநாட்டை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு எதிரான கையெழுத்து போராட்டம் இடையில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஒரு சில மாதங்கள் தடைப்பட்டிருந்தது. அது மீளவும் முடுக்கி விடப்பட்டுள்ளது. ஓர் ஊர்தியுடன் சென்று பயங்கரவாத தடுப்பு சட்டத்திற்கு எதிராக நடமாடும் செயல்பாடுகளை தற்போது முன்னெடுத்துள்ளோம். இலங்கையின் அனைத்து மாவட்டங்களுக்கும் இது கொண்டு செல்லப்படவுள்ளது. வடக்கு செயற்பாடு நிறைவடைந்துள்ளது. அடுத்து அநுராதபுரம் நோக்கி நகரவுள்ளோம். தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக அம்பாந்தோட்டை செல்லவுள்ளோம்.

ஐ. நாவில் இந்தியா, “இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை கொடுப்பதில் இலங்கை அரசாங்கம் கால இழுத்தடிப்பு ஒன்றை செய்து வருகின்றது”, என்று சொல்லியிருக்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது உள்ளடங்கலாக அதிகாரப் பகிர்வு முறை செய்யப்பட வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, 13 ஆம் திருத்தச் சட்டத்துடன் இந்த விடயம் நிறைவுக்கு வருகிறது என அவர்கள் சொல்லவில்லை. ஆகவே இந்த நிலைப்பாடு நல்ல நிலைப்பாடு. முதல் படியாக 13ஆவது திருத்தத்தை அமுல்படுவத்துவதாக இருந்தாலும் அதனை செய்யட்டும். ஆனால், அது தீர்வல்ல. அரசியல் தீர்வு என்பது ஒரு சமஷ்டி கட்டமைப்பிலான அதிகார பகிர்வாக அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். அத்தகைய அதிகார பகிர்வையே ஏற்றுக் கொள்வோம். இந்தியாவும் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளது.- என்றார். (ஐ)

## ‘ஜெனிவா’...

செயல்பட்டது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு 3. 8 பில்லியன் டொலர்களை 4 வருடங்களுக்கு எமக்கு வழங்க முடியும் என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்த போது, 4 மாதங்களுக்கு முன்னர் நாடு வங்குரோத்து நிலைக்குள்ளானபோது இந்தியா தாராளமாக இலங்கைக்கு ஆதரவாக கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர்கள் கடனை வழங்கியது. இந்தியா கொடுத்த கடன் உதவியால் அந்த சில மாதங்களில் இலங்கைக்கு எரிபொருள், உணவு, மருந்துகள் கிடைத்தன.

ஆனால், அப்படி உதவி செய்த இந்தியாவை ஆத்திரமடைய வைத்தது சீன உளவுக் கப்பலை இலங்கை வர அனுமதித்த செயல். தற்போது இந்தியா இதற்குப் பதிலடி கொடுக்கத் தொடங்கியுள்ளது. அதில் ஒன்று ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக வலுவான சமிக்ஞையை வழங்குவது. இரண்டாவதாக, இலங்கைக்கு இந்தியா இனி நிதியுதவி வழங்காது என்ற அறிவிப்பு.

இதன்படி, தற்போது உலக நாடுகளிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ள சீனா, வடகொரியா, பொருளாதார நெருக்கடியில் உள்ள மாலைதீவு ஆகிய நாடுகள் மட்டுமே ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு ஆதரவாக கருத்து தெரிவிக்கின்றன. இதன் ஊடாக சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை நோக்கி நகர்கிறது என்பது தெளிவாகின்றது - என்று சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ-சி)

## ஐ. எம். எவ்....

இது தொடர்பான தெளிவூட்டல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மெய்நிகர் வழியாக நடைபெறவுள்ளது.

சீனா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட பல நாடுகளிடம் கடனைப் பெற்றுள்ள இலங்கை இறையாண்மை பத்திரங்களிலும் கடன்களை பெற்றுள்ளது. அந்த வகையில் சுமார் 50 பில்லியன் டொலர்களை இலங்கை செலுத்த வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆசிரியர்களின்...

களின் வாழும் உரிமையை பறித்து வருகின்றனர்.

இதை எதிர்த்துப் போராடி வரும் மக்கள் போராட்டங்களை அடக்கி ஆட்சியாளர்கள் ஒருபோதும் வெற்றி பெறமுடியாது. போராட்டம் ஒருநாள் இந்த அரசாங்கத்தை அழித்துவிடும். நாட்டு மக்களின் எதிர்ப்பால் பதவி விலகிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தற்போது நாடு திரும்பி மக்களின் வரிப்பணத்தில் சுகபோகம் அனுபவித்து வருகின்றமை தொடர்பில் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## கூட்டமைப்பைப்...

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை எதிர்வரும் டிசெம்பர் 17 அல்லது 18 ஆம் திகதி நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் உள்ள தாயகம் பணிமனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்தது. கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் - முடிவுகள் எடுக்கப்பட்டன.

நேற்றைய கூட்டம் பெரியளவிலான சர்ச்சைகள் - முரண்பாடுகள் இல்லாததாக நடைபெற்றது. முற்பகல் தொடங்கிய கூட்டம் மாலை நேரம் கடந்தும் நடந்தது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் பங்கேற்கவில்லை. ஏனைய மத்திய குழு உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

அண்மைக்காலமாக தமிழ் அரசுக் கட்சி தேர்தல்களில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தப்படும் விடயம் தொடர்பாக கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தொடர்வதற்கும் பிளவின்றி கூட்டமைப்பை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது என்றும் முடிவானது. அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தவும் ஏற்பட்டுள்ள விரிசல்களை சரிசெய்யவும் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் கட்சிகளுடன் பேசுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும்,தேசிய மாநாட்டை எதிர்வரும் டிசெம்பர் 17 அல்லது 18ஆம் திகதி நடத்துவது என்று முடிவு எட்டப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி நிறுவப்பட்டு டிசெம்பர் 18 ஆம் திகதி 73 ஆண்டுகள் நிறைவடைகிறது. இதனால், அன்றைய தினத்தில் மாநாட்டை நடத்த விருப்பம் தெரிவிக்கப்பட்டது. எனினும், திகதி இறுதி செய்யப்படவில்லை. இதே போன்று, இந்தத் தேசிய மாநாட்டை திருகோணமலையில் நடத் துவதற்கும் ஆலோசனை தெரிவிக்கப் பட்டது. இது தொடர்பிலும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. (ஐ)

## பொருளாதார...

சியமான விடயங்கள் என கனடா பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்

இலங்கையின் பெரிதாக்கப்பட்டுள்ள இராணுவம் குறித்து கரிசனை வெளியிட்டு ஜூன் மாதம் சர்வதேச நாணய நிதியத்துக்கு கடிதம் எழுதியதாக தெரிவித்துள்ள அவர் ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் இந்த விடயம் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இராணுவம் பெரிதாக்கப்பட்டுள்ளதாக காணப்படுகின்றது. ரஷ்யாவுக்கு எதிராக போரிட்டுக் கொண்டிருக்கும் உக்ரைன் இராணுவத்தைவிட இலங்கை இராணுவம் இரண்டு மடங்கு பெரியது - என்றும் அவர் கூறினார்.

## விஷமிகளின்...

வைரவர் கோயிலுக்கு அண்மையாக இடம்பெற்றது.

பனை மரங்கள் திடீரென தீ பற்றி எரிவதைக் கண்ட அயலவர்கள் உடனடியாக தீயணைப்பு பிரிவினருக்கு அறிவித்தனர். அங்கு வந்த தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். எனி னும், சுமார் 20 பனைமரங்கள் தீயில் எரிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## புதிய சிக்கலில்...

கோவிட் தொற்றுப் பரவல் காரணமாக கடந்த இரு வருடங்களாக பொலிஸ் துறைக்கு புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இதனாலேயே ஆள் பற்றாக்குறை ஏற்படவுள்ளது.

தற்போது, பொலிஸ் சேவையில் சுமாராக 85 ஆயிரம் பேர் உள்ளனர். இவர்களில், 2023ஆம் ஆண்டு 5 ஆயிரம் பேர் ஓய்வு பெறுகின்றனர். தவிர, வெளிநாடு செல்ல 5 ஆண்டுகள் விடுமுறையும் வழங்கப்படுகிறது. இந்தக் காரணங்களால் பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் பொலிஸாரின் எண்ணிக்கை குறைவடையலாம்.

எவ்வாறாயினும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ ஆள்பற்றாக் குறையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பெரும் எண்ணிக்கையானவர்கள் ஓய்வு பெறவில்லை என்று சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ-சி)

## தாமதத்தால்...

டுள்ளது.

எரிபொருள் கப்பல்களுக்கு தாமதக் கட்டணம் அதிகளவில் செலுத்தப்படுவதன் ஊடாக நாட்டின் டொலர் கையிருப்பு விரயம் செய்யப்படுவதாக கனிய வள பொது சேவையாளர் சங்கத்தின் தலைவர் அசோக ரன்வல குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த 23ஆம் திகதி முதல் மசகு எண்ணெய் கப்பல் இவ்வாறு இலங்கை கடற்பகுதியில் நங்கூரமிடப்பட்டுள்ளது. இதற்கு பெருமளவான தாமதக் கொடுப்பனவை செலுத்த நேரிட்டுள்ளது.

இவ்வாறான நிலையை தவிர்க்க ஒன்றிணைந்த வேலைத்திட்டம் ஒன்று அவசியம் என்றும் கூறினார்.

## அரசமைப்பு...

னியா பட்டாணிச்சூரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், கடந்த மூன்று வருட ஆட்சியிலே மிக மோசமாக பொருளாதாரம் நாசப்படுத்தப்பட்டது. மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு எண்ணெய் வழங்கப்படாமல் தொழில் பாதிக்கப்பட்டு மிகுந்த கஷ்டத்தின் உச்சத்தில் அவர்கள் இருக்கின்றனர். திட்டமிட்ட அடிப்படையில் அவர்களின் செயல்பாடுகள் அமையாததால் சாதாரண குடிமக்களும் வாழ முடியாத நிலைமையை காணக்கூடியதாக இருக்கின்றது.

இதேவேளை, நாட்டை சீரழித்தவர்களுக்கு எதிராகவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பிரேரணையை ஐ. நாவில் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிடின், சர்வதேசம் அவ்வாறானவர்களை தண்டிக்கும் என்ற செய்தியையும் சொல்லியிருக்கின்றது. எனவே, இவ்வாறான மோசமான நிலையில் இருந்து நாட்டை காப்பாற்றுவதற்காக எதிர் காலத்திலே மக்கள் ஒன்றுபடவேண்டிய தேவை இருக்கின்றது.

அரசமைப்பு மாற்றம் தொடர்பாக பேச்சளவிலேயே ஆட்சியாளர்கள் இருக்கின்றார்களே ஒழிய, நாட்டை பற்றியோ அரசமைப்பை பற்றியோ அல்லது நாட்டினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவது சம்பந்தமான செயல்பாடுகளையோ காணவில்லை. அமைச்சர் பதவிகளை அதிகளவில் வழங்குவதன் ஊடாக அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கின்றவர்களான, இந்த நாடு சீரழிவுக்கு உள்ளானதற்கு காரணகத்தாவாக இருந்த முன்னாள் அமைச்சர்களை மீண்டும் அமைச்சர்களாக நியமிப்பதற்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றதே ஒழிய அரசமைப்பு மாற்றம் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுப்பதாக தெரியவில்லை.- என்றார்.

ஈழநாடு
Eelanadu

# புதின்மூன்றாம் திருத்த சட்டத்தை சகல கட்சிகளும் ஏற்கவேண்டும்!

## இரா. துரைரட்ணம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 19

இலங்கை சிறுபான்மை தமிழ் மக்கள் தொடர்பா ஜெனிவாவில் முதன்முதல் 13ஆவது திருத்தச்சட்ட தீர்வு திட்டத்தை முன்வைத்த நாடு இந்தியா. இது ஒரு நாட்டில் இருக்கின்ற ஓர் இனத்துக்காக பேசியது என்பது ஒரு வரலாற்று சதாப்தமாகும். எனவே இதனை அனைத்து தமிழ் தலைமைகளும் ஏற்றுக் கொண்டு அதற்கான கட்டுமானப்பணிகள் மற்றும் செயல்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உறுதிபூண அனைத்து கட்சிகளுக்கும் ஈ. பி. ஆர். எல். எவ் பத்மநாபா மன்ற தலைவரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இரா. துரைரெட்ணம் அழைப்பு விடுத்துள்ளார்.

கட்சி அலுவலகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற சிறுபான்மை தமிழ் மக்கள் தொடர்பாக இந்திய அரசு ஐ.நாவில் இலங்கை சிறுபான்மை தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் தொடர்பாக 13 வது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்ற தொனியில் ஐ. நாவில் இந்திய அரசு முன்வைத்தது என்பது பாராட்டக்கூடியது - கௌரத்துக்குரியது - ஏற்றுக்கொள்ளக்கூடியது.

பல தடவைகள் நாடுகள் கூடி ஜெனீவாவில் பல தீர்மானங்கள் எடுத்திருந்தாலும்கூட இலங்கை தொடர்பாக ஜனநாயகம், பன்மைத்துவம், வன்முறை அடிப்படை மனித உரிமை மீறல், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பல விடயங்களுக்கு முடிவு எடுத்திருந்தாலும் இலங்கை சிறுபான்மை மக்கள் தொடர்பாக தீர்வு திட்டத்தை ஐ. நாவில் முதல் முதல் ஒரு நாடு முன்வைத்தது என்றால் அது இந்திய அரசுதான்

எனவே இதனை வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ் கட்சிகள் புரிந்துகொண்டு சரியாக அமுல்படுத்துவதற்கு சரியான ஒத்துழைப்புகளை நல்கவேண்டும். ஐ. நாவில் இந்திய அரசால் முன்வைக்கப்பட்ட 13 வது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு அமுல்படுத்தி அதனை அமுல்படுத்துகின்ற விடயத்தை வடக்கு, கிழக்கில் அதற்கான கட்டமைப்புகளை மேற்கொள்வதற்காக மாகாண சபை தேர்தல்கள், மாகாணசபை முறைமைகள் அதிகாரபரவலாக்கல் போன்ற தமிழ் மக்களுக்குரிய ஆரம்ப கட்டுமானப்பணிகளை தொடங்குவதற்கு நாங்கள் உறுதிபூணவேண்டும்.

அது இல்லாத பட்சத்தில் கடந்த 32 வருடங்களுக்கு மேலாக நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ளாதவர்களாக பார்த்தும் பாராதவர்களாக செய்யக்கூடியவர்கள் செய்யாமல் செல்கின்ற சூழ்நிலைக்கு செல்லாமல் தமிழ் தலைமைகள் ஏற்றுக்கொண்டு அதற்கான கட்டுமானப் பணிகளை செயல்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு உறுதிபூண அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றேன் - என்றார்.

# இராஜாங்க அமைச்சர்களுக்கு பதில் அமைச்சு பொறுப்புகள்!

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க வெளிநாடு சென்றுள்ள நிலையில் அவரின் கீழ் உள்ள அமைச்சுக்களின் இராஜாங்க அமைச்சர்களுக்கு பதில் அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அறிக்கை மூலம் இந்தத் தகவலை ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளுது.

இதன்படி, பதில் பாது காப்பு அமைச்சராக பிரமித பண்டார தென்னகோனும், நிதி, பொருளாதார, ஸ்திரப் படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகளின் பதில் அமைச் சராக ரஞ்சித் சியம்பலாபிட்டி யவும், பெண்கள், சிறுவர் விவ காரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக கீதா குமாரசிங்கவும், தொழி நுட்ப பதில் அமைச்சராக கனக ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக திலும் அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட காணி தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டது!

## ஜெயபுரம் கிராம மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, செப். 19

**பூநகரி பிரதேச செயலக பிரிவுகுட்பட்ட ஜெயபுரம் கிராமத்தைச் சேர்ந்த 27 பேருக்கு தலா ஓர் ஏக்கர் வீதம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட காணியை, தனியார் ஒருவருக்கு வன வளத் திணைக்களம் வழங்கியுள்ளதாக ஜெயபுரம் கிராம மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.**

இது தொடர்பில் தெரியவருபவை வருமாறு,

ஜெயபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஆரம்ப குடிகள் 138 பேருக்கு தேவன்குளத்தின் கீழ், தலா ஓர் ஏக்கர் வீதம் ஒருபோகம் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற காணிகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

இந்த 138 ஏக்கர் காணிக்குள் 30 ஏக்கர் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியும் உள்ளடங்கியிருந்தது. எனவே, அதற்கு மாற்று ஏற்பட ஜெயபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில், பழைய வன்னேரிக்குளம் வீதியில் 30 ஏக்கர் காணி ஒன்று, பூநகரி பிரதேச செயலகம் மற்றும் வனவன திணைக்கள உயரதிகாரிகளால் அடையாளப் படுத்தப்பட்டது.

எனினும், தமக்கு வழங்க வேண்டிய காணியை மாவட்ட வனவளத் திணைக்களம் தனியார் ஒருவருக்கு வழங்கியுள்ளது. அவரிடம் குறித்த 30 ஏக்கர் காணிக்கான ஆவணங்கள் இருக்கின்றன என்று தெரிவித்தே காணியை தனியாருக்கு வழங்கியதாக வனவளத் திணைக்களம் தெரிவித்துள்ளது என ஜெயபுரம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பூநகரி பிரதேச செயலகத்திடம் வினவிய போது, இந்த 30 ஏக்கர் காணியை மாவட்ட வன வளத் திணைக்களம் தனியார் ஒருவருக்கு வழங்கியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு, அவர் 30 ஏக்கர் காணியையும் துப்பரவு செய்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

அத்தோடு, குறித்த காணியை மாவட்ட வனவளத் திணைக்களம் எந்த ஆவணத்தின் அடிப்படையில், தனியார் ஒருவருக்கு வழங்கியிருக்கின்றார்கள் என்பதையும் அந்த ஆவணத்தின் பிரதி ஒன்றையும் தமக்கு அனுப்பி வைக்குமாறும், மாவட்ட வனவளத் திணைக்களத்திடம் பூநகரி பிரதேச செயலகம் கோரியுள்ளது. (ஐ)

# அதிகாரம் இல்லாவிடினும் மக்கள் பணியாற்றுவோம்!

## எதிர்க்கட்சி தலைவர்

நாட்டின் ஜனநாயக வரலாற்றில் பாரம்பரிய எதிர்க் கட்சிக்கு அப்பால் சென்று, அரச அதிகாரம் இருந்தோ அல்லது இல்லாமலோ மக்கள் சமூகத்தை பலப்படுத்த தற்போதைய எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி செயல்பட்டுள்ளது இவ்வாறு கூறியுள்ளார் எதிர்க் கட்சி தலைவர் சஜித்.

ஐக்கிய மக்கள் சக்தியால் நடைமுறைப்படுத்தப் படும் “பிரபஞ்சம்” வேலைத்திட்டத்தின் ஊடாக 34ஆவது பேருந்தை அன்பளிப்பாக வழங்கி உரை யாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு நாட்டின் உயிர் நாடியான பிள்ளைகள் அறிவு, திறமை போலவே வசதி வாய்ப்புகளிலும் பரிபூரண மாக்குவதை தனது பொறுப்பாகக் கருதுவதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் நாட்டைக் கட்டியெழுப்பத் தேவையான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதாகவும் சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளை இலக்காகக் கொண்டு சமூக நல மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலத்தில் பலர் இலவசக் கல்வியை எதிர்த்தனர். இலவச கல்வியால் வழங்கப்படும் வாய்ப்புகளால் உயர் சாதியினரின் பணிகளுக்கு வேலையாட்கள் இல்லாத நிலை ஏற்படும் என அக்காலத்தில் சிலர் சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவை குற்றம் சாட்டிய விதத்தை சஜித் பிரேமதாஸ நினைவு கூர்ந்தார்.

74 வருடங்களாக எல்லா அரசியல்வாதிகளும் நாட்டை அழித்தனர். 225 பேரும் ஒரே மாதிரியானவர்கள் எனவும் பலர் குற்றம் சுமத்திய போதிலும், நாட்டின் ஜனநாயக வரலாற்றில் பாரம்பரிய எதிர்க் கட்சிக்கு அப்பால் சென்று, அரச அதிகாரம் இருந்தோ அல்லது இல்லாமலோ மக்கள் சமூகத்தை பலப்படுத்த தற்போதைய எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி செயல்பட்டுள்ளது.

மக்களுக்கு சேவை செய்வதற்கு ஒருபோதும் அமைச்சுப் பதவிகளோ, சிறப்புரிமைகளோ தேவையில்லை. நானும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற குழுவும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாட்டுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# தமக்கான சலுகைகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர்கள் அதிருப்தி!

கொழும்பு, செப். 19

தற்போது நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்கள் தமக்குக் கிடைத்துள்ள சலுகைகள் தொடர்பில் அதிருப்தியில் இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஆங்கில வார இதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சுப் பதவிகளை தராவிட்டால் ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதில்லை என்று பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் அச்சுறுத்தினர் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இதுவரை 39 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு அமைச்சர்களின் சம்பளம் வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆனால், புதிதாக பதவியேற்றுள்ள இராஜாங்க அமைச்சர்கள், தமக்கு செயலாளர்கள் தேவை என கோரிக்கை விடுத்துள்ளனர் அது மட்டுமின்றி அவர்களின் அமைச்சுக்குரிய விடயதானங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படாமல் இருப்பது குறித்தும் இராஜாங்க அமைச்சர்கள் கவலையடைந்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் ஏறக்குறைய பஸில் ராஜபக்ஷவின் வற்புறுத்தலின் பேரிலேயே இடம்பெற்றதாகவும், இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்ற பலர், தமக்குக் கிடைத்த இராஜாங்க அமைச்சர் பதவிகளுக்காக பஸில் ராஜபக்ஷவுக்கு பகிரங்கமாக நன்றி தெரிவித்திருந்தனர்.

அமைச்சரவை அமைச்சர்களுக்கு இராஜாங்க அமைச்சர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என ஜனாதிபதி எதிர்பார்க்கிறார். ஆனால், இராஜாங்க அமைச்சர்கள் கோரும் வகையில் செயலாளர்களை நியமிக்கவோ அல்லது விடயதானங்களை வர்த்தமானியில் வெளியிடவோ ஜனாதிபதி தயாராக இல்லை என்றும் கூறப்பட்டிருந்தது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
07.00 மணி : இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துனையாளர் யாழ் பாவாணன்
7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-தமிழ் ரொக்கர்ஸ்
11.00 மணி : நமக்காக நாம்-மறுஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா - வைத்தியர் அரவிந்தன்



**இரவு**
07.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: மீம்ஸ் பேட்டை
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு